# திராவிடநாடு


"உதவி! உதவி!!"
டி. டி. கே. என்கிறது பத்திரிகைச்
செய்தி! ரூ. 5000-கோடி போதாது,
6000-வேண்டும் என்று அறிக்கை
விடுத்திருக்கிறர், நேரு,
உதவியோ விரும்பிய நிலையில் இல்லை.
விரைவில் டி. டி. கே. அமெரிக்காபோய்
நேரில் பணம் கேட்டுவரக்கூடும் என்
றும் ஒரு தகவல் வந்துள்ளது.

மலர் 16] ஆண்டு சந்தா ரூ. 8 [28—7—57] தனிப் பிரதி 16-காசு [இதழ்

# இன்னொரு குடியரசு

பிரெஞ்சுப் பிடியிலே சிக்கியிருந்து கடந்த ஆண்டு விடுதலை பெற்ற டுனிஷியா இந்தக் கிழமை குடியரசு நாடாகியுள்ளது.

250 ஆண்டுகளுக்குமேல் மன்னர்தம் ஆட்சியிலேயே சிக்கியிருந்ததை தகர்த்து குடியாட்சி நாடாக டுனீஷிய அரசியலமைப்புச் சபை, பிரகடனம் செய்துள்ளது.

விடுதலை வீரரும் தற்போதைய பிரதமருமான ஹபீப் பர்குபா இந்தப் பிரகடனத்தை சபையில் படித்தபோது, பெருத்த ஆரவாரமும் பெருமகிழ்ச்சியும் தென்பட்டதாம்! தற்போது மன்னராக விளங்கும் சிதிலாமின் என்பாரின் ஆட்சி முடிவுற்று, மக்களாட்சி மலர்கிறது. பிரெஞ்சுக்காரர்களுடன் பேரம் பேசிக்கொண்டு, மக்கள் குரலை மதிக்காத வகையில், மன்னர் பரம்பரை சுதந்திரப் பாதைக்கு முட்டுக்கட்டை போட்டு வந்தனர், என்பது பர்குபாவின் குற்றச் சாட்டாகும். சிதிலாமினுக்கு இப்போது வயது 76. அவருடைய மூன்றாவது மகன், போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டிருந்த ஒரு போலீஸ்காரரின்மீது காரை ஏற்றியதும், இது பரபரப்பையும் பலத்த கண்டனத்தை ஏற்படுத்தியதையும் பலர் அறிந்திருக்கக்கூடும். பிரெஞ்சு லூயியின் வீழ்ச்சிக்கு அவன் மனைவி அண்டாய்னட் வாங்கியதாக சொல்லப்பட்ட ஒரு வைரமாலை எப்படிக் காரணமாக அமைந்ததோ, அதுபோல இந்த முடியாட்சி முடியவும், இந்தச் சம்பவம் ஒரு காரணமாகிவிட்டது எனலாம்! அரசியலமைப்பு சபையே, இந்தப் பிரகடனத்தைச் செய்துவிட்டபடியால், எவ்விதப் பிரச்சினைக்கும் இடமில்லை. எகிப்துக்குப் பிறகு மத்தியக் கிழக்கில் நடக்கும் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும் இது! குடியாட்சியாகி விட்டதால், மன்னர் பரம்பரைக்கு எவ்வித ஆபத்தும் வராதென்றும், பழிவாங்கும் நடவடிக்கை யெதுவும் எடுக்கப்படப் போவதில்லை யென்றும் பர்குபா தெரிவித்துள்ளார்.

மணிமுடி தாரிகள் இதுவரை செய்துவந்த ஆடம்பரங்களையும் அட்டகாசங்களையும் கண்டு மனம் கொதித்து நின்ற மக்களுக்கு இது ஒரு ஆனந்தத் திருநாள் என்பதில் ஐயமில்லை. கடந்த ஆண்டோடு டுனீஷியாமீது பிரெஞ்சுக்காரருக்கு இருந்த ஆதிக்கம் முடிந்துவிட்டபடியால், மன்னர் அடைக்கலம் புகவும், புகார் செய்யவும் இப்போது இடமில்லை.

கடந்த ஆண்டே, மன்னரின் நடவடிக்கைகள் யாவும் கட்டுப்படுத்தப்பட்டதென்றாலும், எப்படியும் டுனீஷியாவை ஒரு குடியரசாக்குவதென்று பர்க்யுபாவின் 'நியோ டெஸ்டார்' கட்சி முடிவு எடுத்திருந்தது. அந்த இலட்சியம் இப்போது நிறைவேற்றப்பட்டுவிட்டது.

இந்தப் பெருமை பர்க்யுபாவுக்கே சேரும். இதன் மூலம், மத்தியக் கிழக்கில், இன்னொரு நாசர் தோன்றுகிறார் என்று கூறலாம். ★

# டாக்டர் மறைவு

கடற்கரையிலே மாலையிலே உலவினார்! நள்ளிரவிலே பிணமானார்.

தள்ளாத வயதிலும், நாட்டு வாழ்க்கையில் தனக்கிருந்த அக்கறையினைக் கொஞ்சமும் குறைத்துக் கொள்ளாத அந்த நல்லவரை, மார்பு வலி வெகு சீக்கிரம் நம்மிடமிருந்து பிரித்தெடுத்துக் கொண்டு போய்விட்டது. செய்தி கேட்டதும், உண்மையில் திடுக்கிட்டோம். ஏனெனில் டாக்டர் வரதராசுலு அவர்கள், தமிழ் நாட்டு அரசியல் சரிதத்தில் ஒரு முக்கியமான இடம் பெற்றவர்கள் ஆவார்கள். 'நாயக்கர்' என்றால் எப்படி பெரியார் அவர்களைக் குறிக்குமோ, அதுபோல 'நாயுடு' என்றால் டாக்டர் அவர்களையே குறிப்பிடும். பெரியார் — டாக்டர் — திரு. வி. க. இம்மூவரும், தமிழ் நாட்டுக் காங்கிரசைப் பேணி வளர்த்தவர்கள் என்பதையும், என்னென்ன இன்னல்களை யெல்லாம் அனுபவித்தவர்கள் என்பதனையும் நாட்டோர் அறிவர். காமராஜரே, "என் போன்றவர்களை உருவாக்கியவர்", என்று கலக்கத்தோடு இடுகாட்டில் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார். உண்மையில் இன்று காங்கிரசில் சேருவதும் எளிது! சேரவும் யாராரோ முன்வருகிறார்கள்!! ஆனால், அற்றை நாள் காங்கிரஸ், சுதந்திரப் போராட்டத்திலீடுபட்டிருந்தபோது, அரியணை கிடையாது—தற்போது நம்மவர்கள் என்னென்ன சங்கடங்களை ஏந்த வேண்டியவர்களாக உள்ளனரோ—அந்தளவுக்குப் புயலும் பூகம்பமும் நிரம்பியதாக இருந்தது. தடியடி, சிறை, வழக்கு, தண்டனை, இவைகளே ஒவ்வொரு தொண்டனின் தினசரி வாழ்க்கையாக இருந்த நேரம்! அதுபோது, தனது சித்த வைத்தியத் துறையினையும் துறந்து, வருவாயையும் இழந்து, துணிவு மிக்க பல போராட்டங்

14-ம் பக்கம் பார்க்க

காஞ்சீபுரம்

28—7—57

# தம்பி !

இனியன, இனி, பல என்று எழுதியிருந்தது கண்டு மகிழ்ச்சியைத் தெரிவித்திருக்கிறாய்—நன்றி—ஆனால் எனக்கு ஒரு சிக்கல் ஏற்பட்டுவிட்டதே, என்ன செய்வது? இனியன என்று பொதுப்படையாகக் கூறிவிட்டேன், ஆனால் உனக்கு எவை இனியனவோ! இனியன என்று எண்ணிக்கொண்டு நான் எதைக் கூறினும், அண்ணா! இதனை எங்ஙனம் இனியன! என்று நான் கொள்ள முடியும் என்று கூறிவிட்டால் என்ன செய்வது? இதுதான் எனக்கு வந்துற்ற கவலை! எனினும் அடுத்த கணம், என் கவலை, சிறிதளவு சிந்தனையின் காரணமாகக் கடுகி ஓடிவிட்டது. உன்னை நான் அறிவேன் அல்லவா! உடன்பிறந்தானின் உள்ளப்பாங்கு புரியாமலா போகும்! உன்னை ஆட்கொண்டிருக்கும் எண்ணங்களை அறிந்திருக்கும்போது, உன் உள்ளத்திலே உருவாகி எழிலும் ஏற்றமும் பெற்று நாட்டுக்கு அளிக்கப்பட்டு வரும் எண்ணங்களை நான் மிகுந்த ஆவலுடன் கவனித்து அறிந்துகொண்டிருக்கும்போது, தம்பி! உனக்கு எவை இனியன என்பதனையா அறிந்துகொள்ள முடியாது?

வாளின் கூர்மை அறிந்தால் வீரன் இன்புறுகிறான் — ஆனால் அவன் முழு இன்பம், கூர்வாள் கொடியோனின் மார்பிலே பாய்ந்து அவன் கீழே வீழ்ந்திடும் போதன்றோ ஏற்படும்! ஆம்! என்கிறாய், கேட்கிறது. ஆனால் தம்பி, தூய்மையான இன்பம், சுவையுடன் பயனும் கலந்ததான இன்பம், கூர்வாள் கொடியோனைக் குத்திக் கொன்றிடுவதிலே அல்ல, "கூர்வாள் கொண்டோன்! குறியில் திறனுள்ளோன்! அஞ்சாது போரிடும் ஆற்றல் படைத்தோன்! இவனிடம் போரிட்டு வெற்றி காண இயலாது. எனவே ஆற்றலுக்கு அடங்குதலே சாலச் சிறந்தது, இவன் போன்ற வீரர், கொடுமை நடமாட விட்டுவைக்க மாட்டார்கள், கொடுமை இனி நிலைக்காது, நீதிக்காகப் போரிட, நேர்மை நிலைத்திருக்கப் போரிடும் ஆற்றல் மிக்கோர் எழுந்துவிட்டனர், இனி நம் கொட்டம் பலிக்காது" என்பதனை உணர்ந்து கொடுமைக் குணத்தையே அவன் விட்டொழித்திட, நல்வழிப்பட உறுதி காட்டுகிறானே, அப்போதல்லவா தனியானதோர் இனிமை உள்ளத்தில் எழும்!

"காலையிலே, கண்ணாளா! கடை வீதியிலிருந்து தாங்கள் வாங்கி அனுப்பிய, புதுப் புடவை! எப்படி இருக்கிறது, அதனை நான் அணிந்துகொண்டிருக்கும் காட்சி" என்று கலாபம் இல்லாமலேயே மயிலென விளங்கிடும் குயில்மொழியாள் பேசிடக் கேட்டு, உள்ளத்தரசன் உவகை அடைகிறான்!- இனிய காட்சி காண்கிறான்! —களிப்பு அடைகிறான்! இல்லை என்பார் இல்லை! ஆனால், தம்பி, குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்புணர்ச்சி தட்டி எழுப்ப, உழைத்துப் பிழைத்துப் போ!

## இன்றையப் பகைவர் நாளைய நண்பர்!

என்று உறுமிடும் முதலாளியின் குரல்போல ஆலைச் சங்கொலி இழுத்திட, தொழிற்சாலைக்குச் செல்லும் நேரத்தில், துயரால் தாக்கப்பட்டு, தொல்லைகளைத் தாங்கித் தாங்கி, தவித்துக்கிடக்கும் அவன் துணைவி அழுக்கேறிய ஆடையுடன் அலங்கோலமாக இருக்கக்கண்டு மானென்றும் மயிலென்றும், மாடப்புறுவென்றும், பாடாத பைங்கிளி வாடாத முல்லை, தெகிட்டாத தேன்! என்றெல்லாம், கதையும் கவிதையும் கூறத்தான் செய்கின்றன! இளமை தரும் எழிலுடன், உழைப்பு அளித்த உருவ அமைப்புடன்தான், இவள் என்னை மணம் புரிந்துகொண்ட நாளன்று இருந்தாள்! இன்றோ! இளைத்து, களைத்து, இளமைக் கட்டுகள் குலைந்து, ஓயாத உழைப்பும், அதற்குத் தேவையான அளவுக்கு வலிவூட்டமளிக்கும் உணவு படிப்படியாகக் குறைந்ததனால் வலிவினை இழந்து நிற்கிறாள், ஆடையிலே பொத்தல் — அழுக்கேறி இருக்கிறது! நான், உழைக்கத்தான் செய்கிறேன், கடுமையாக உழைக்கிறேன், கடமை உணர்ச்சி குன்றாமல் உழைக்கிறேன், இவளைக் களிப்புடன் வாழ்த்திட வைக்கவேண்டும் என்ற எண்ணத்தைத் துணைக்கு அழைத்தபடிதான் உழைக்கிறேன், எனினும் கிடைக்கும் ஊதியம் போதுமானதாக இல்லை: உருக்குலைந்து கிடக்கிறாள்! அழுக்கேறிய ஆடை — அதிலும் பல பொத்தல்!--என்று எண்ணிக் கவலை குடையும் மனதினனாகித்தான் ஆலைசெல்கிறான். மாலை அவன் வீடு திரும்பும்போது, ஆடையின் அழுக்கு போக்கப்பட்டு, பொத்தல்கள் சரியாக்கப்பட்டு, அதனை மெத்த பக்குவமாக உடுத்திக்கொண்டு, புன்னகை தவழும் முகத்துடன், அவன் துணைவி வரவேற்றால் அதிலே கிடைக்கும் இனிமை — அந்தக் காட்சி தரும் இனிமை—காலையில் கடைவீதியிலிருந்து வாங்கி அனுப்பிய புதுச்சேலையை உடுத்திக்கொண்டு, மாலையில் மகிழ்ச்சியுடன் நிற்கும் மனைவியைக்காணும்போது ஏற்படும் இனிமையைவிட, அதிகமா, குறைவா என்பதல்ல தம்பி, பிரச்சினை, நிச்சயமாக, இஃது தனியானதோர் இன்பம் தருவது —அதில் ஐயமில்லை,

தம்பி, இனியன என்பன, உனக்கும் எனக்கும் எவை என்பதிலே மாறுபட்ட கருத்திருக்கக் காரணமில்லை. ஆனால், வேறு பலர் உள்ளர், அவர்தம் உள்ளத்தைத் தொடும் எண்ணங்களும், அவர்களுடன் உறவாடும் கருத்துக்களும் வேறு, அதற்கேற்பத்தான், அவர்கள் இன்னின்ன எமக்கு இனியன என்று கூறுவர்.

"அழித்துவிட்டு மறுவேலை பார்க்கிறேன்! அத்துணை ஆணவமா, நேற்றுக் கிளம்பிய இந்த நீண்டபேச்சினனுக்கு! நாட்டு மக்களைப் படை திரட்டி விட்டோம் என்று முழக்கிடும் இந்த முரடன், முடிதரித்த மன்னர் பலர் எமது அடிபணிந்தனர் என்பதனை அறிவானோ! இவன் கொட்டம் அடக்கிக் காட்டுகிறோம்! கொடி கட்டி ஆள்கிறானும்; இவன் எமக்கு, பிடித்தால், பொடி! அறியான்!" என்றெல்லாம் ஆர்ப்பரித்த ஆங்கில அரசு, பிறகு நிலைமை அறிந்துகொண்டு, ஆணைக்கு அடங்கி, கட்டணம் செலுத்த இணங்கி, குறித்த நேரத்தைக் கணக்கில் வைத்து, காட்டிய வழியினை கவனத்திலிருத்தி தனது **கலங்களை** அனுப்பிற்றே **சூயஸ்** கால்வாயில், அந்தக் காட்சி, **நாசரின்** கண்ணுக்கும் கருத்துக்கும் எத்தனையோ விதவிதமான காட்சிகளை எல்லாம் விட, நிச்சயமாக, **இனியது** அல்லவா! **பரூக்** மன்னன் விரண்டோடிய காட்சியும், **நகீப்** அடங்கி ஒடுங்கிய காட்சியும் இனிமை தருவனவாகத்தான் இருந்திருக்கும்! ஆனால், ஆணவத்தை விட்டொழித்து, ஆங்கில அரசு, சூயஸ் கால்வாயில், தன் கலத்தினை அனுப்பி வைத்ததே, அந்தக் காட்சிதான், மிக்க இனியது!

**இனியன கேட்கின்**
**இயம்புதல் கேளீர்,**
**இனிது இனிது**
**எகிப்தின் எழுச்சி!**
**அதனினும் இனிது**
**ஆணவம் தவிர்த்து**
**ஆங்கில அரசு**
**அடி பணிந்ததுவே!**

என்று நாசர் பாடவா வேண்டும், இப்போதெல்லாம் வெளிவருகிற படத்தைப் பார்த்தால், தம்பி, இந்தப் பாடல் தெரியும்!

அதேபோல, சட்டப் பேரவையிலே அமர்ந்திருக்கும் அனுமதியை உன் அறிவாற்றலின் துணைகொண்டு பெற்ற **நாங்கள்**, அங்கு, ஒவ்வொரு பிரச்சினையின் பேரில் பேசும் வாய்ப்புப் பெறுகிறபோதெல்லாம், தென்னகம், வடக்கே அமர்ந்து அரசோச்சுபவர்களால் தாழ்த்தப்படுவது குறித்து கண்டனம் தெரிவிக்கிறோம். இந்த இழிநிலை இருக்கும் மட்டும், நீவிர் எத்துணைதான் நல்லெண்ணம் கொண்டோராக இருப்பினும், ஆளவந்தோரே! மக்கள் தம் குறை தீர்த்து அவர் தம் வாழ்வினுக்கு வளம் அளித்திடல் இயலாது!!—என்றெல்லாம் எடுத்துக் கூறுகிறோம் — தாயகத்தின் சார்பில், வாதிடும் வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நழுவவிடாது அவைதமைப் பயன்படுத்திக்கொள்ளும் பாங்கு, உனக்கு உவகை அளிக்கிறது, இனியன காண்கிறோம! என்கின்றனர் சட்டப் பேரவையில் நமது தோழர்கள் கடமையாற்றுவதைக் காண்போர். ஆனால், அமைச்சர் சுப்பிரமணியனாரோ, ஆயாசப்படுகிறார், இதென்ன மெத்தப் படித்தவர்கள் என்கிறார்கள் இவர்களை; இவர்களோ எடுத்த பிரச்சினையின்மீதெல்லாம் தொடுத்திடும் கணை, வடக்கு-தெற்கு என்பதாகவே இருக்கிறதே, என்னே இது, என்று பேசுகிறார்; தமது அருவருப்பைக் காட்டிக்கொள்கிறார்.

**எந்தப் பிரச்சினையின்மீது விவாதம் நடந்தாலும் அண்ணாத்துரையும் அவர் சகாக்களும் தனி நாடு கோரிக்கை குறித்துத்தான் பேசுகிறார்கள்**—என்று **டைம்ஸ் ஆப் இந்தியா** எழுதுகிறது; எழுதும்போது அந்த இதழின் நோக்கம், சட்டப் பேரவையிலே நடந்துகொள்ள வேண்டிய முறைப்படி நடந்துகொள்ளாமல், நாட்டுப பிரிவினை குறித்தே இவர்கள் பேசுகிறார்கள் என்று தன் அருவருப்பைத் தெரிவித்துக் கொள்ளுவதுதான் என்று மட்டும் எனக்குப் படவில்லை. தம்பி! வடநாட்டு இதழ்கள் பல, இதுபோல எழுதுவதிலே, ஒரு உட்பொருள் நிச்சயமாக இருக்கிறது!

சென்னை சட்டப் பேரவையில் அமர்ந்துகொண்டு ஒரு சிறு கூட்டத்தார், நித்த நித்தம் வடவர் ஆதிக்கத்தைக் கண்டித்துப் பேசியவண்ணம் உள்ளனர்; இது நாள் வரையில் சதுக்கங்களிலும் திடல்களிலும் எழுப்பப்பட்டு வந்த முழக்கம் இப்போது சட்டப்

(13-ம் பக்கம் பார்க்க)

# எங்கிருந்தெல்லாமோ

## கேட்கிறது,

# இலட்சிய கீதம்!

"டானிக்", யாருக்குத் தேவை? இளைத்தவனுக்கா, கொழுத்தவனுக்கா!!"

"என்ன கேள்வி இது! அவசியம் இளைத்தவனுக்குத்தானே கொடுக்க வேண்டும்."

*

"சமதர்மம் என்றால், என்ன?"

"இது தெரியாதா! உண்டு கொழுப்பவன் வசம் செல்வம் திரள்வதைத் தடுத்து, உழைத்து அலுப்பவனும் சுகமாக வாழும்படிச் செய்வது?"

* * *

*இளைத்தவனுக்கு 'டானிக்' தரப்படுகிறதா! ஏழைக்கும் இன்பம் கிடைக்கும் வழி செய்யப்படுகிறதா!! — என்று கேட்கிறார், அவர்.*

*சோஷியலிசம், சோஷியலிசம் என்று பேசப்படுகிற இந்த ஆட்சியில், சமதர்ம நோக்கம் உள்ளதா, தாழ்ந்தவன் உயர வழிவகையுண்டா, என்று கேட்கிறார் அவர்.*

*சாகச முரசம் தட்டி, டாடாக்களையும் பிர்லாக்களையும் கொழுக்க வைப்பது தாராளமாகச் செய்யப்படுகிறதேயன்றி, தக்கதோர் உதவி, நமக்கு அளிக்கப்படுகிறதா, என்று கேட்கிறார் அவர்.*

*எங்ஙனம் மனிதரிடையில், ஏழை பணக்காரன் என்கிற பேதம் இருக்கிறதோ அதுபோல ஒரு இடத்துக்கு இன்னொரு இடம் பேதம் இருக்கலாமா, இது நீதியாகுமா, தர்மந்தானா, என்று கேள்விக் கணைகளைப் பூட்டுகிறார், அவர்.*

*சாலையும் சோலையும் அங்கே! ஆலைகள் பல அங்கே! அணைக்கட்டுகள், அபரிமிதமான திட்டங்கள், எல்லாம் அங்கே!—இது சரியா, இது நல்லதா, என்று வேதனையுடன் விடுக்கிறார், வினா. அரசியலல்ல நான் பேசுவது, நான் அரசியல் வாதியல்ல, எனினும் இதுபோன்ற ஏற்றத் தாழ்வுகளைப் பொதுவாக இருப்பவர்கள், கவனிக்காமலிருக்கலாமா? இப்படியே விட்டால் என்ன ஆகும், என்று கலக்கத்தோடு தெரிவிக்கிறார்!*

*கசையடி எனக் கருதக்கூடும் காங்கிரஸ்புரியினர்—இவருக்கென்ன பேசாமலிருக்கக் கூடாதோ என்று எரிச்சலும் அடையக்கூடும் — யாராரெல்லாமோ இப்படியெல்லாம் பேச ஆரம்பிக்கிறார்களே என்று திகில் கூடக் கொள்ளக்கூடும். ஏனெனில், அவரது உரையிலே, தெளிவு இருக்கிறது! எடுத்துக் கூறுகிற விஷயத்தை விஷமத்தனமானது என்று மறுத்துவிட இயலாது!! ஏனெனில், அவர், இளைத்தவன் யார் என்பதை எடுத்துக் காட்டுகிறார் — அவனுக்கு நீதி அளிக்கவேண்டியது தானே முறை என்று கேட்கிறார் —அளிக்கப்படவில்லையே என்றும் சோகிக்கிறார்.*

*"இரண்டாயிரம் கோடி தென்னாட்டுக்கு வேண்டுமாம்! இந்த அண்ணாதுரை, பேசுகிற அரசியலைப் பார்த்தாயா? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கெனச் செலவழிக்கத் திட்டமிட்டுள்ள 6,000 கோடி ரூபாயில் 2,000 - கோடி வேண்டுமாம்! என்ன ஆசை — என்ன ஆசை" என்று கெக்கலித்தனர், காங்கிரஸ் மந்திரிகள். கம்யூனிஸ்டுகள் கச்சை கட்டியப்படி 'கதாயுதம்' தூக்கினர்.*

*இளைத்தவனுக்கு 'டானிக்' வேண்டும்! தென்னாட்டுக்கே, அதிகப் பொருளுதவி செய்ய வேண்டும்—வடநாடு, சுகக் காடு! தென்னாடு சுடுகாடு!! வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது! —என்று பேசுகிற இவர், சிறந்த பொருளாதார மேதை! இந்திய அரசுக்கே, பொருளாதார ஆலோசகராயிருந்தவர்! சென்னை பல்கலைக் கழகத்தில் பொருளாதாரப் பேராசிரியராக இருந்தவர்! அவரது மேதா விலாசத்தைச் சுப்பிரமணியம் மறுக்க முடியாது — டி. டி. கிருஷ்ணமாச்சாரி வாதிட வர இயலாது—டில்லி ஏதாவதொரு காரணம் காட்டித் தள்ளிவிட இயலாது. பேராசிரியரல்லவா, அதனால் கேள்விக் கணைகள் பூட்டியபடியே, நிலைமை விளக்கம் அளிக்கிறார்! உண்மையில், அண்மையில் கிடைத்துவரும் ஆதரவு கீதத்தில், இவரது கூற்றும் ஒரு சிகரம் என்போம்!! ஏனெனில், பி. ஜே. தாமஸ் எனும் பேரறிஞர், கூனனும் நிமிரும் வகையில், குருடனும் ஒளிபெறும்படி, வாழும் வடக்கையும தேயும் தெற்கையும் படம் பிடித்துள்ளார். அதுவும் எங்கே? மயிலாப்பூரிலுள்ள விவேகானந்தா கல்லூரியில்!!*

*டில்லியோடு இணைந்திருக்க வேண்டும்—ஒரே இந்தியாவாக இருப்பதுதான் நல்லது - தெற்காவது, வடக்காவது — நேரு எப்பேற்பட்டவர் தெரியுமன்றோ — என்று அரசியலையே அடுப்பங்கரைத் தொழிலாக்கிக் கொண்டிருப்போர் வாழும் திருமயிலையில் அப்பேற்பட்டவர்கள் அமர்ந்திருக்கும் திருச்சபை முன், இந்தச் சிந்தனை வினாக்களை எழுப்பியிருக்*

கிருர் தாமஸ்; தி. மு. க. அல்ல அவர்! **பொது மனிதர்,** அவர் கூற்றுப்படி!!

வடக்கு ஒரு பணத்தோட்டம்—டாடாக்கள் பிர்லாக்கள் உண்டு அங்கே—ஆமதாபாத்தும் பம்பாயும் உண்டு — பணங்கொழுத்த பூமி—ஆலைகள் ஏராளம் அங்கே—அந்த ஆலைகளில் விளையும் பொருள்களுக்கு மார்க்கெட்டாக இருக்கிறது, தென்னுடு. எப்படி வெள்ளைக்காரன் காலத்தில் லங்காஷயரும் மான்செஸ்டரும் இந்தியாவைச் சுரண்டியதோ அதுபோல பம்பாயும் ஆமதாபாத்தும் தென்னுட்டைச் சுரண்டுகிறது, என்று, இன்று நேற்றல்ல, பதினைந்து ஆண்டுகளுக்கு மேல், புள்ளிவிபரத்தோடு கூறி வருகிறோம். பாங்குகள், எங்கே? வடக்கே! இன்ஷியூரன்சு கம்பெனிகள், எங்கே? அங்கே! ஆலை அதிபர்கள் எங்கே? வடக்கே! சோலைபுரி எது? வடக்கு! **கனரகத் தொழில் புரிவது, வர்த்தகம் செய்வது, வைரமும் தங்கமும் குவித்திருப்பது, வடக்கு தான்!** என்று ஆயிரமாயிர முறை **எடுத்துச்** சொல்லி வருகிறோம்.

சீறிலார், காங்கிரஸ் நண்பர்கள்! இதோ, பி. ஜே. தாமஸ் அறிவிக்கிருர் — வடநாடுதான் பணக்கார பூமி என்று!! அவர் இந்திய அரசின் பொருளாதார ஆலோசகராயிருந்தவர்—விருப்பு வெறுப்பற்ற நிலையிலிருக்கும் பொது மனிதர்—தி. மு. க. அல்ல; அவர் இவ்விதம் தெரிவிக்கிருர்.

## வடநாடு, தொழில் மயமான நாடு.

இருந்தால் என்ன? சிந்திரியில் ஆலையிருந்தால் என்ன--பிலாயில் இரும்பும் டாடா நகரில் எஃகும் தயாரிக்கப்பட்டால் என்ன--சித்தரஞ்சனில் இரயில் பெட்டிகட்டுவதைப்பற்றி ஏன் கோபமடைகிறீர்கள்—வடக்கில் தொழிலிருந்தால் என்ன மோசம்வந்துவிடும்? எல்லாம் ஒரே இந்தியாதானே! ஒரு வீட்டுக்குள் எது எப்படியிருந்தால் என்ன!!—என்று காமராஜர்கள் கேட்கிருர்களல்லவா, அவர்களுக்கு இதோ, தாமஸ் தருகிருர் பதில்.

## ஒரு பகுதி மட்டும் பணக்காடாகவும், வளர்ச்சியுறுவதாகவும் இருப்பது, பிறபகுதிகளுக்கு தீங்கு விளைப்பதாகும்.

என்ன தீங்கு வந்துவிடும் என்பர் தேசீயத் தோழர்கள் — திட்டத்தில் வடக்கே செலவழித்தால் என்ன என்று கேட்பர் — இந்த அண்ணுதுரை கூறுவது விதண்டாவாதம் என்பர்--ஆனுல் தாமஸ், விளைகின்ற தீங்கு என்னவென்பதையும் விளக்குகிருர்.



**ஐந்தாண்டுத் திட்டப்படி அதிகப் பணத்தைச் செலவழிக்கிருர்கள் வடக்கே**

**இராணுவத்துக்காகவும் ஏராளமான பணம் வடக்கே செலவழிக்கப்படுகிறது.**

இப்படிச் செலவழிக்கப்படுகிற பணம் எங்கே போகிறது? இராணுவத்துக்காக 250 கோடி செலவழிக்கிருர்கள் என்ருல், சம்பளம் வாங்கும் அதிகாரிகளும் படைவீரர்களும், அப்பணத்தை அரிசி வாங்கவும் கோதுமை பெறவும் ஏனைய பொருள்களை வாங்கவும் வடக்கேயேதானே செலவழிக்க வேண்டியிருக்கிறது!: அதுமட்டுமின்றி ஆலைகள், புதுப்புது அணைத் திட்டங்கள் முதலியவைகளை பல நூறுகோடி செலவிட்டுக் கட்டுகிருர்கள் — அப்படிச் செலவழிக்கிற பணம் எங்கே போகிறது? வேலை செய்பவர்களுக்கும், அதிகாரிகளுக்கும்தானே, செல்லுகிறது!! இதனுல், எத்தனையோ பேருக்கு வேலை கிடைக்கிறது — அவர்களிடமெல்லாம் பணம் தாராளமாகப் புழங்குகிறது. இதனுல், வடக்கே என்ன ஏற்படுகிறது என்பதை விளக்குகிருர், தாமஸ்.

**"இப்படி அதிகப்பணம் நடமாடுவதால், உணவு தானியங்கள் மற்றும் மனிதனுக்கு வேண்டிய பொருள்களை ஏராளம் வாங்க ஆரம்பிக்கின்றனர். இப்படி சரக்குக்கு, கிராக்கி ஏற்படுவதால், விலை உயர்வு ஏற்படுகிறது."**

பேராசிரியரின் இவ்விளக்கத்தை எவரும் சாதாரணமாகக் கருதிவிட முடியாது — பணம், வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதால் பலர் கைக்குப் போகிறது; அவர்கள் வேண்டுமென்கிற பொருள்களை விருப்பப்படி வாங்க ஆரம்பிக்கிருர்கள். அதனுல், வேறு இடங்களிலிருப்போர், பொருள்களை அங்கே கொண்டுபோய் விற்ருல் அதிக லாபம் பெறலாம் எனக் கருதுகின்றனர். பொருள்கள், வடக்குக்கே கொண்டுபோய்க் குவிக்கப்படுகின்றன. இதனுல்,

**"விலை உயர்வின் கஷ்டத்தை இந்தியா முழுதுமே அனுபவிக்கவேண்டியிருக்கிறது தென் பகுதிகளிலேயிருப்போர் அதிக விலைகொடுத்து வாங்கவேண்டியவர்களாகிருர்கள். விலை உயர்வு, பாதிக்கிறது, அதிகமாக."**

என்கிருர்! ஏனெனில், வடக்கைப் போல இங்கும், ஆலைகளுக்கும் அணைத் திட்டங்களுக்கும், நூறு கோடி இருநூறு கோடி, என்கிற அளவில் கட்டப்பட்டால், பல்லாயிரம் பேருக்கு வேலை கிடைக்கும், கூலி வரும், பணமும் புழங்கும். ஆனுல், இங்குதான் 'எவ்விதப் பெருந் திட்டமும் கிடையாதே! அதனுல், தேவையான பொருள்கள் அதிக விலைக்கு வடக்கே போய்விட, திண்டாடுகிருர்கள்—ஊதியமும் அதிகமில்லை! விலை உயர்வோ, அதிகம்! இந்த நிலை, தனித்தனி நாடாகஇருந்தால் ஏற்படாதல்லவா? தாமஸ் அதைச்

சுட்டிக்காட்டவில்லை, ஆனால் கூறு மல் கூறுகிறார்,

**ஐந்தாண்டுத் திட்டத்தில் போதுமான தொகை தெற்குக்கு ஒதுக்கப்படவில்லை. அப்படி ஒதுக்கும் வகையில், திட்டம் திருத்தப்படவேண்டும்.**

என்று! அப்படிச் சொல்லும் போதுதான் வளர்ந்துகிடக்கும் வடநாட்டைக் காட்டுகிறார்—தேம்பிடும் தெற்கைப் படம் பிடிக்கிறார்—கொழுத்தவனுக்கு 'டானிக்' ஏன் என்கிறார்--பணக்காரன் மாடி உயரவே மேலும் மேலும் டில்லி வசதிகளைத் தருகிறது என்கிறார். தெளிவாக டில்லியின் ஓர வஞ்சனையைப் படம் பிடித்துக் காட்டுகிறார்!!

அப்படிக் காட்டும்போது, அவர் ஒரு யோசனையையும் வெளியிடுகிறார், டில்லிக்கு. அந்தயோசனைப்படி, நடப்பார்களா, அவர்கள்? ஒருக்காலுமில்லை! ஏனெனில், நாம் கேட்கிறோமே திராவிடநாடு, அதற்கான உட்பொருள்கொண்ட யோசனை அது!! தாமஸ் சொல்கிறார்,

**வடக்கே ஆலைகள், பெரும் பெரும் திட்டங்கள் இருக்கட்டும்.**

**ஆனால் ஒன்று! அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை, தெற்குக்குக் கொடுக்க வடக்குத் தயாரா?** எல்லாம் ஒன்று! யாவும் ஒன்று!! என்று பண்பாடுகிறார்களே, அவர்கள் இந்த யோசனைக்குச் சம்மதிப்பரா? தொலைந்து போகட்டும்! எல்லாவற்றையும் அனுபவிக்கட்டும்! ஆனால், வருமானத்தை மட்டும் இங்கே அனுப்பச் சம்மதிப்பார்களா? ஒருக்காலும் ஒப்பார். ஏனெனில், ஒரே தேசம், ஏக ஒற்றுமை என்று பண்பாடுவதெல்லாம் லாபத்துக்காகத்தானே ஒழிய, இழக்கவா! இப்படி, வேண்டிய பண உதவியை ஆண்டுதோறும் டில்லி அளிக்க முன்வருமா? ஒருபோதும் வராது! அதனால்தான் பேராசிரியர் இந்த யோசனையைத் தருகிறார்! அவரது உரையில் குறிப்பிடவேண்டிய இன்னொரு இடம்,

**எங்கு மக்கள் தொகை அதிகமாக உள்ளதோ அங்கு அதிகப் பணம் செலவிடப்படவேண்டும்.**

**தெற்கே மக்கள் வளம் மட்டுமல்ல, தொழில் ஆரம்பிப்பதற்கான வளமும் நிரம்ப உள்ளது.**

என்பதுதான். இதனையே, ஒவ்வொரு மேடையிலும் சொல்லுகிறோம் நாம்! தாமஸ், பொருளாதாரப் பேராசிரியர் — டில்லிக்கே ஆலோசகராயிருந்தவர் — அவர் கூறுகிறார், தென் பகுதியில் மக்கள் அதிகமாக வாழுகின்றனர்! அதனால் வேலை செய்ய ஏராளமானோர் இருக்கின்றனர்—வேலை செய்ய ஆளிருந்து என்ன பயன்? வசதிகள் வேண்டாமோ எனின் அதுவும் ஏராளம்! ஏராளம்!! ஆனால் அதற்கேற்ற மனவளம் தான் இல்லை வடவர்களிடம்—திட்டத்தில் போதிய தொகை தென்னாட்டுக்கு ஒதுக்கப்படவில்லை — மீண்டும் மீண்டும் கொழுத்தவனுக்கே 'டானிக்' தரப்படுகிறது! கும்பி கொதிப்பவன், கோவென அலறும் நிலை நீடிக்கிறது!! என்று கூறுகிறார். அவ்விதம் சொல்லிய பேராசிரியர், உதிர்த்த இன்னும் ஒரு சில வாக்கியங்களையும் உற்று நோக்க வேண்டுகிறோம்.

★ **அமெரிக்காவிலுள்ளதைவிட, ஐரோப்பாவிலிருப்பதைவிட, பல மாதிரியான வேறுபாடுகள் நிரம்பிய உபகண்டம், இது.**

★ **இந்தியாவின் ஏனைய பகுதிகளைவிட தென்னிந்தியா, வேறுபட்டதாகும். இங்கே நான்கு மொழி பேசும் குழுவினர் உள்ளார்கள். அவர்கள் நால்வரையும் ஒன்றுபடுத்தக்கூடிய முக்கிய நன்மைகள் உள்ளன.**

★ **தென்னிந்தியாவிலுள்ள இந்த ஒற்றுமையைக் கொண்டு, தென்னிந்தியாவின் பொருளாதாரத்தையும் நிர்வாகத்தையும் உருவாக்கவேண்டும்.**

என்ன பொருள் இதற்கு? திராவிடத் தனி நாடு என்று நாம் சொன்னால், கசக்கும் காங்கிரஸ் அன்பர்களுக்கு! தாமஸ் — கேரளத்து வல்லுநர்—தெரிவிக்கிறார் இவ்விதம்!!

வாழும் வடக்கைக் காட்டுகிறார்—அங்கேதான் அதிகப் பணம் செலவிடப்படுகிறதென்கிறார் — தென்னாடு, மக்கள் தொகை நிரம்பியதாக யிருந்தும் பலன் பெறவில்லை என்கிறார்—வளமிருந்தும் வாழ வழி செய்யப்படவில்லை என்கிறார் — தெற்கிலுள்ள நான்கு குழுவினரும் ஒரே மாதிரியான பிணைப்புக்கொண்டவர்கள் என்று கூறுகிறார்—அவர்தம் பொருளாதார நிர்வாக உறவுகள் இணைந்திருக்க வேண்டும் என்கிறார். இதுதானே, நாம் கூறும் திராவிட நாடு! தாமஸ், தி. மு. க. அல்ல; அவரே நான் பொது மனிதன் என்று கூறிக்கொள்கிறார். அப்படிப்பட்டவர் இப்படியெல்லாம் விளக்கக் காரணம் என்ன? காலம், கனிகிறது! உண்மை, ஒவ்வொருவர் இதயத்தையும் தொடுகிறது! எங்கெங்கிருந்தோ நம் இதயகீதத்துக்கு ஆதரவு திரள்கிறது!! இதைக் கண்டு அஞ்சி என்ன பயன்? உண்மை, எத்தனை நாளைக்குத்தான் தூங்கிக்கொண்டே இருக்கும்!!

★

"தீபஸ்தம்பம்" என்பது கலங்கரை விளக்கமாகிவிட்டது, இப்போது. கலங்கரை விளக்கமெனில் கப்பலுக்கு வழி காட்டுவதற்காகக் கடற்கரையிலுள்ள விளக்கு என்று பொருளல்ல. கரைதல் என்றால் அழைத்தல் என்று பொருள். 'காக்கை கரவாகரைந்துண்ணும் ஆக்கமும் அன்ன நீரார்க்கே உடைத்து' என்று வள்ளுவரும் கூறியிருக்கிறார். ஆகவே கலங்கரை விளக்கமெனில், கலத்தைக் கரைக்கு அழைக்கும் விளக்கு என்றுதான் பொருள். சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லாரும் இப்பொருளைக் குறிப்பிட்டிருக்கிறார். தீபஸ்தம்பமெனில், வெறும் விளக்குத் தூண் என்றுதான் பொருள்படும். பழந்தமிழ்ச் சொற்கள் பொருள் நிறைந்தவை என்பதைக் குறிக்கவே இதனை எடுத்துக்காட்டினேன்." என்று திருச்சி மாவட்ட தமிழ் எழுத்தாளர் சங்க 2-வது ஆண்டு விழாவுக்கு தலைமை தாங்கிய பேராசிரியர் ஆர். பி. சேது (பிள்ளை) குறிப்பிட்டார்.

ஒரு உரையாடல்

# சாவடி

"என்ன! சென்னைக்குப் போயிருந்தியாமே..."

"ஆமாம் பெரியய்யா! சட்டசபையைப் பார்க்கணும்னு ஆசை. பார்த்துட்டு வந்தேன்."

"ஊம்! எங்களாலே முடியுதா? உன் வாயாலே சொல்லு...எப்படியிருக்கு சட்டசபை..."

"என்னத்தைச் சொல்றது பெரியய்யா! நாள் தவறாமெ, 'வடக்கு தெற்கு', 'தமிழ் இந்தி', 'தி. மு. க. பிரிவினை', என்கிற பேச்சு கேட்டுக்கிட்டே இருக்குது!!"

"யார் பேசறாங்க......தி. மு. க. எம். எல். ஏ.-ங்கதானே!"

"இவுங்க பேசறாங்களோ, பேசவில்லையோ, ஒவ்வொரு மந்திரியும் இதுபற்றிக் குறிப்பிட்டுப் பேசாமல் இருக்கிறதில்லே..."

"அதாவது, தி. மு. க.-வுக்குப் பதில் சொல்றதுதான் முக்கியம்னு நினைக்கிறாங்க..."

"ஆமாமாம்! எதைப் பற்றிப் பேசினாலும், எந்த விவாதமானாலும், தி. மு. க.-தான் கண் முன்னே தெரியுது......பாருங்க, பெரியய்யா! கல்விக்குப் பணம் செலவழிக்கிறதைப் பற்றி விவாதம்...கல்விக்கு நிறையச் செலவழிக்கணும், கல்வின்னா ஏ. பி. சி. டி.-யோடெ பிள்ளைகளை நிறுத்தி விடறதில்லே, எல்லோரும் கல்லூரிப் படிப்பு படிக்கணும், அதுக்கான வசதிகளைச் செய்யணும்னு தி. மு. க. சார்பிலே எடுத்துச் சொன்னாங்க..."

"முடியாது!ன்னாரா, மந்திரி..."

"அதெப்படி சொல்ல முடியும்? காங்கிரஸ் மேலேயிருக்கிற கோபத்திலே, எல்லாத்தையுமே எதிர்ப்பாங்க...கண்டிப்பாங்க...கலாட்டா செய்வாங்கன்னுதான் பலபேரு போல மந்திரியும், இத்தனை நாளும் நினைச்சுக்கிட்டு இருந்திருக்காரு...நேருக்கு நேர் பார்க்கிறப்பதானே நாங்க எப்பேர்ப்பட்டவங்கன்னு தெரியுது! அதனாலே, அதுபற்றி ஒண்ணும் சொல்ல முடியலே...முடியாது, அண்ணாதுரை சொல்றதுபோல, அதிக கல்வி வசதியைச் செய்ய முடியாதுன்னா கூறமுடியும்..."

"ஆமாமா, அதெப்படி முடியும்?"

"ஆனால், விவாதத்துக்குப் பதில் சொல்லியாகணும்னு ஒரு முறையிருக்கே! அதிலே, ஏதாவது ஒரு சங்கதி பற்றி காரசாரமாப் பேசியாகணுமே...இந்தியை எடுத்து வைச்சுகிட்டு பேசு பேசுன்னு பேசினாரு, 'நம்ம' சுப்பிரமணியம்..."

"அதென்ன 'நம்ம' சுப்பிரமணியம்கிறே!"

"எந்தக் கட்சியிலே யிருந்தா என்ன பெரியய்யா! காமராஜரா யிருந்தாலும், பக்தவத்சலமாயிருந்தாலும், கக்கனாயிருந்தாலும், வெங்கட்டராமமாயிருந்தாலும், ராஜாராமமாயிருந்தாலும், எனக்கும் 'நம்மவங்க'தானே......'பாஸ்போர்ட்' வாங்கிக்கிட்டு திராவிட நாடு அமைஞ்சதும் டில்லிக்கா ஓடிப்போயிடப் போறாங்க......" இல்லே, பாருங்க! அதனாலே, அவுங்க மேலே ஒரு பாசம்—இப்படி வடநாட்டுக்குத் தெண்டனிட்டு கிடக்கிறாங்களேன்னு நினைக்கும்போது ஒரு பரிதாபம்... வேறென்ன!!"

"இதுதான், நல்ல குணம்! கொள்கை வேற்றுமைக்காகக் குடுமியைப் போய்ப் பிடிக்கிறதும், 'குருஷேவ்' வேலை நடாத்துறதும் ரொம்பத் தப்பு...ரொம்பத் தப்பு ...உண்மையான கொள்கைவேகம் இருக்கிறவங்களுக்கு அன்பும் அமைதியும்தான் அவசியம் இருக்கணும்...அதுக்காககொள்கையை விட்டுட்டு ஒரே கொடியைப் போட்டுக்கிட்டு கூத்தடிக்கிறதும், அப்புறம் வயற்றிலே அடிச்சுக்கிறதும் அரசியல் இல்லே...இல்லியா"

"பெரியய்யா! இவ்வளவு புரிஞ்சிக்கிட்டு இருக்கீங்கன்னு நினைக்கிறப்ப எனக்கு ஆனந்தமாயிருக்குங்க..."

"...ஊம்! இந்தியை எடுத்து வைச்சுகிட்டு என்ன பேசினாரு சுப்பிரமணியம்...?"

"அதைப் படிக்கலேன்னா நாளைக்கு நம்பப் பிள்ளைங்களுக்கு வேலை கிடைக்காமெப் போயிடும்.........இதை நல்லா எண்ணிப் பாருங்க! நான் மனதாரச் சொல்றேன், நாளைக்குச் சர்க்காரிலே உத்தியோகம் கிடைக்காது...நிச்சயமா இந்தி தெரியலேன்னா கிடைக்காது...கிடைக்காதுன்னு அழுத்திப் பேசினாரு..."

"ஒரு சந்தேகம்..."

"கேளுங்க பெரியய்யா..."

"சர்க்கார் உத்தியோகம், உத்தியோகம்னு சொன்னாருங்கிறீயே! அது கிடைக்கலேன்னா, உலகத்திலே குடியே யிருக்க முடியாதா... எல்லாரும் நாட்டை விட்டுட்டு

கடலிலே போய்க் குதிச்சிடும்படி நேருமா...ஊம்! உத்தியோகத்துக்காக மானத்தையே இழந்துடணுமங்கிறா மந்திரி..."

"நல்லாச் சொன்னீங்க பெரியய்யா! ஏதோ, இந்த அகில பாரதமும் என்னைக்கும் ஒண்ணா யிருக்கப் போகிறதுபோல எண்ணிக்கிட்டு இப்படிப் பேசறாரு மந்திரி...இவரோடெ 'குரு' ஆச்சாரியாரோ, இந்தியா ஒரு துணைக் கண்டம்—இது, துண்டு துண்டாலும் ஆகலாம்கிறாரு..."

"ஆச்சாரியாரா, இந்தியா ஒரு தேசம் இல்லே! துணைக்கண்டம் என்றாரு! இப்ப, யாராரோ உங்கள் கொள்கைகளைப் பற்றிப் பேச ஆரம்பிக்கிறாங்களே..."

"எங்க கொள்கைன்னு இல்லீங்க பெரியய்யா.........உண்மை அது தானுங்களே! நாட்டைப்பற்றி நல்லவிதமா நினைச்சா நாங்க சொல்றது சரின்னு படாமலா போகும்! கவர்னராயிருந்த குமாரசாமி ராஜாவே கூறலீங்களா..."

"ஆமாம்! ஆச்சாரியார், போன்ற அறிவாளிங்கல்லாம் இப்படிப் பேசறப்ப—சுப்பிரமணிய மட்டும் இந்தியா எப்பவும் ஒண்ணா யிருக்கும்" கிற எண்ணத்திலே ஏன் இப்படி இந்தியைப் படிக்கச் சொல்றாரு......"

"இதிலே ஒரு வேடிக்கை பெரியய்யா! உங்களுக்கு ஞாபகமிருக்கோ.........முதன் முதலிலே இந்தியை நம்ப தலையிலே திணிச்சது யாருன்னு ஞாபகமிருக்கோ.........?"

"ஏன் ஞாபகமில்லே! ஆச்சாரியார்தான் திணிச்சாரு...அதைக் கண்டிச்சு நாடெல்லாம் கிளர்ச்சி நடந்துச்சு.......ஆயிரம் பேருக்கு மேலே ஜெயிலுக்குப் போனீங்க. தாளமுத்து,நடராசன்னு இரண்டு பேர் செத்தாங்க..."

"அப்ப, என்ன சொன்னாரு ஆச்சாரியாரு?"

"இந்தி ரொம்ப முக்கியம்! இதை எதிர்க்கிறது பைத்யக்காரத்தனம்!! முட்டாளுங்கதான் எதிர்ப்பாங்கன்னாரு..."

"அப்படிச் சொன்னவரே ஒரு ஆண்டுக்கு முந்தி பெரியவங்களையெல்லாம் கூட்டி, இந்தியை எதிர்க்கணும்.........அதுக்கு என்ன செய்யலாம்...அப்படினனு யோசிச்சாரு!"

"ஞாபகம் இருக்கு! அண்ணாதுரை நெடுஞ்செழியன் கூடப் போயிருந்தாங்க இல்லே..."

"ஆமாம்! ஆச்சாரியாரே வேணும்கிறாரு...அவருக்குச் சீடரு வேணும்கிறாரு..."

"நெடுநாளா, ஒரு சந்தேகம் எனக்கு..."

"என்ன பெரியய்யா!"

"இந்தின்னாவே, உங்களுக்கு வெறுப்பா...?"

"செச்சே! அது என்னச் செஞ்சுது பெரியய்யா? பிரெஞ்சு, லத்தீன், ஜெர்மனி, சீனம் என்கிற மொழிகள்ன, வெறுக்கவா செய்றோம்..."

"இல்லியே...!"

"இந்தியும் அந்த மொழிகளைப் போல இருந்தா பரவால்லே... அதுகளுக்கு மரியாதை கொடுக்கிறதுபோல இந்திக்கும் கொடுக்க நாங்க தயாரு...இந்தியிலே நல்ல படம் வந்தா 'போகாதீங்கன்னு' சத்யாக்ரகமா செய்யறோம், இந்தியிலே நல்ல கருத்து இருந்து மொழி பெயர்த்துச் சொன்னா ரசிக்காமலாயிருக்கிறோம். நம்ப தலையிலே ஏறிச் சவாரி செய்ய வர்றப்பதான் தடுக்கிறோம்! வேணும்கிறோம்! ஆதிக்க மொழி என்கிறோம்!!"

"புரியுது! நல்லாப் புரியுது! கார்டிலே இந்தி...காசிலே இந்தி ...பேரெல்லாம் இந்தி...அரசாங்க மொழியே இந்திங்கிறப்ப எதிர்க்கிறீங்க......"

"அதேதான்! தமிழ், ஏற்கனவே தலைவிரிகோலமாயிருக்குது. இப்ப இந்திங்கிற கத்தியைக்கொண்டு அது மார்பிலே பாய்ச்சறதை எப்படிங்க பெரியய்யா சகிக்க முடியும்?"

"நிசந்தான் நீ சொல்றது! பாயுற கத்தியைப் பார்த்தும் மந்திரி இப்படிப் பேசறாருன்னு, பரிதாபமும் கோபமும் கலந்துதான் வருது...நீங்க, இந்தியாவைவிட்டு திராவிடநாட்டை வெட்டி யெடுத்துகிட்டுப் போகவாப் போறீங்க...இல்லீல்லே!"

"தனியா வாழணும்...சிநேகமா வாழணும்......உறவுக்கு வட்க்கு இருக்கணும்......இப்படிச் சரண்டு வது கூடாது என்கிறோம். என்னமோ, இரண்டையும் தனித்தனியாக்கி இந்துமகா சமுத்திரத்திலே கொண்டுபோய் திராவிட நாட்டை வைச்சு வீரமுனும்னு சொல்றதுபோல, நினைக்கிறாரு சுப்ரமணியம்..."

"ஆமாம்! அவருக்கு, நீங்க சொல்றது, புரியாமலாயிருக்கு..."

"நல்லாப் புரியுது! அதனாலே தான், குழப்பம் ஒரு சமயமும், இன்னொரு சமயத்திலே திகைப்பும். இப்படி திண்டாடுறாரு...... ஏதாவது பேசுறாரு..."

★

## பகவானாவது !!

அசுத்தமாகி விடுமாம்! — அறிவித்திருக்கிறார், அமைச்சர் வெங்கட்டராமன், கோயில்கள், அசுத்தமாகி விடுமாம் !!

நடைபாதையில் வசிப்பவர்கள் முதலியோருக்கு கோவில்களில் இடவசதி செய்து கொடுத்தால் என்ன, என்கிற கேள்விக்குத்தான், இவ்வாறு பதிலளித்துள்ளார். கேட்டவர் நமது அன்பழகன்.

கோவில்கள், அசுத்தமாகி எவ்வளவோ காலமாகிவிட்டன — அங்கு பரிசுத்தமும் தூய்மையுமா இருக்கிறது — பகற் கொள்ளைக்காரர்களும், யாரார் தலையைத் தடவலாம் என்கிற எண்ணம் கொண்டோருமே கூடுகின்றனர், என்று பலர் கூறுகின்றனர். அங்கே, வட்டமிடும் வௌவால்களும், குருவிகளும் ஏராளம், ஏராளம்! அவர்களையெல்லாம்விட, மோசமாகக் கருதப்படுகிறான், மனிதன். அசுத்தமாகிவிடுமாம், அறிவிக்கிறார், அமைச்சர். ஒரு பக்கம் சோலை குலுங்கும் சுந்தர மாளிகைகளையும், இன்னொரு பக்கம் சோற்றுக்கு அல்லாடும் நடைப் பிணங்களையும் 'சிருஷ்டித்த' அந்த ஆண்டவனும் காணட்டுமே, இவர்களை! அப்பப்ப, இவ்வளவு அசுத்த மானவர்களையா நாம் படைத்தோம் என்று பதறித் துடித்து 'இப்பாபம்' போக்க முயலட்டுமே!! அமைச்சர்களால்தான், முடியவில்லை—தமது ஆட்சியில் ஏழைகளிடையே உள்ள அசுத்தங்களைப் போக்க, படைத்த பகவானாவது பார்த்து பரிகாரம் ஒன்று காணட்டுமே!! அமைச்சர் ஏன், குறுக்கிட வேண்டும் — அதற்கான ஏற்பாடுகளைச் செய்தால், என்ன.

★

# வந்தார்! தந்தார்!!

கனியோ, ருசிமிகு பலகாரமோ! நவரசப் பானவகைகளோ! கண்டு களித்த காட்சிகளின் படங்களோ! எதைத் தந்தார்? எப்பேற்பட்ட பொருள் அவர் கொணர்ந்தது? சென்ற இடமெல்லாம் சிறப்புரை வாசித்தனராமே, ஸ்வீடனும் நார்வேயும், டென்மார்க்கும் ஆலந்தும் போட்டியிட்டுக்கொண்டு உபசரித்தனவாமே, பாலேடுகள் அளித்தனராம், பண்ணைகளை அழைத்துப்போய்க் காட்டினராம், விருந்தும் நடனமும் வேடிக்கையும் கேளிக்கையும் ஏராளமாமே, அங்கெல்லாம் பரிசுகள் பல வழங்கினராமே, எதைத்தந்தார்—என்னென்ன அளித்தார், என்கிற ஆவல் எழக்கூடும்!

பார்லிமெண்டு காங்கிரஸ் உறுப்பினர்களைக் கூட்டிவைத்து, வெளிநாட்டிலிருந்து திரும்பிய நேருபிரான், இவைகளை அல்ல தந்தது. தனக்கேற்பட்ட மகிழ்ச்சியினைக்கூடப் பரிமாறவில்லை, அவர்களுக்கு. உள்ளத்தில் கொண்டுவந்தது **சோகம்!** உறுப்பினர்களுக்கு அவர் தந்தது, **எச்சரிக்கை!!**

அங்கே, நிலத்தைக் கடல் கொண்டுவிடாமல் அணைபோட்டு வாழும் ஆலந்து மக்களைக் கண்டிருப்பார்—இங்கே, நிலம் ஏராளமிருந்தும் உழைக்க விரும்பாதோர் இருக்கும் கவனம் உறுத்தியிருக்கும். பால் பண்ணைகளையும் பசு வளர்க்கும் முறைகளையும் கண்டிருப்பார்—இங்கே 'கோ—மாதா' என்று கூறிவிட்டு அதே பசுவைப் பட்டினிபோட்டுக் கொல்வோரின் எண்ணம் தோன்றியிருக்கும் — சின்னஞ்சிறு நாடுகளாம், ஸ்வீடனும் நார்வேயும் சிறப்போடு வாழும் பண்பைக் கண்டிருப்பார் — முப்பது கோடி மக்களிருந்தும் முன்னேற இயலாத பாரதத்தின் நினைவு வந்திருக்கும். அதனால், உள்ளத்தில் சோகம் கப்பியிருக்கும் "இந்த நாடுகள் எல்லாம் இப்படியிருக்கும்போது, நீங்கள் இந்தியாவை களிநடனக் காடாக்க முனைய வேண்டும். இன்றேல், அழிவு நிச்சயம். அரும்பிலேயே, நமது சுதந்திரம் கருகுவது உறுதி'' என்று தன் கட்சியினருக்கு எச்சரிக்கை வழங்கியிருப்பார், என்றெண்ணத் தோன்றும்! ஏனெனில், வெளிநாடுகளில் கண்ட புதுமைகளை, பார்லிமெண்டு உறுப்பினர்களுக்கு எடுத்துக்கூறி, அது போன்றவைகளை இங்கும் சாதிக்கச் சொன்னால்தான், பயணத்தால், நாட்டுக்குப் பயனும் பலனும் ஏற்பட முடியும். நேரு அவர்கள், இவைகளை எடுத்துச் சொல்லவில்லை! எனினும் சோகக் குரலில், **தயாராயிருங்கள்** என்று அழைப்பு விடுத்திருக்கிறார்— **எவ்வித அவசர நடவடிக்கைக்கும் நாம் தயாராயிருக்க வேண்டும்,** என்று எச்சரிக்கை எழுப்பியிருக்கிறார்!

*

என்ன, தயாராயிருக்க வேண்டுமா? என்ன அவசர நடவடிக்கை இப்போது? ஐந்தாண்டுத் திட்டம் பற்றிதானே அடிக்கடி இப்படிச் சொல்லுவார்--இப்போதுஏனிந்த அழைப்புவிடுகிறார்? குரலில் போர்க்கோலம் தென்படுகிறதே— சமாதானத் துதரா இப்படிச் சமருக்குத் தயாராயிருக்கச் சொல்லுகிறார்—எவ்வித அவசரத்துக்கும் தயாராயிருக்கவேண்டுமெனில் என்ன பொருள்? — அமெரிக்கா படையெடுத்து வரப்போகிறதென்னும் இரகசியத்தை எகிப்தில் கேள்விப்பட்டாரா — பிரிட்டன், தனது பட்டாளத்துடன் டில்லியை நோக்கிப் பவனி வரப்போவதாக இலண்டன் மாளிகையிலே எவரேனும் தெரிவித்தனரா — ஏனிவ்வளவு சோகமும்எச்சரிக்கையும், கிளம்புகிறது. உல்லாசப் பிரயாணமுடித்துவந்திருப்பவரிடமிருந்து, உடைந்த வீணையின் நாதமன்றோ, கேட்கிறது? களிப்பு இல்லையே! பெருமூச்சு தென்படுகிறதே! பேச்சில் தெம்பு இல்லையே! காரணம் என்ன?— என்று கேட்கத் தோன்றும்.

உள்ளபடியே, நேரு அவர்களுக்கு, வெளிநாடுகள் விருந்துபசாரத்தை மட்டும் வழங்கவில்லை— விழா, வைபவம், இவைகளுக்கிடையே, கொஞ்சம் 'மருந்தும்' தந்திருக்கின்றனர், என்று தெரிகிறது — "பண்டிட்ஜீ! உங்கள் சேவை, கிலாக்யமானது. ஓடி ஓடி, இப்படி உலக சமாதானத்துக்கு நீங்கள் பறப்பது, பாராட்டுக்குரியது. ஆனால், ஒரு சந்தேகம் — பத்து ஆண்டுகளாக முஸ்லீம்கள் பெரும்பாலாகயிருக்கும் காஷ்மீரத்தை விடாப்பிடியாக வைத்திருக்கிறீர்களாமே? படைகளைக் கூடக் கொண்டுபோய் குவித்திருக்கிறீர்களாமே? பொது வாக்கெடுப்பு நடத்தி, முடிவு செய்யும்படி கோரியும், மறுக்கிறீர்களாமே!'', என்று கேட்டுள்ளனர் என்று தெரிகிறது. அதனால்தான், வந்ததும், இந்த விபரத்தைத் தந்திருக்கிறார்.

**பாகிஸ்தானின் தப்புப் பிரச்சாரம், வெளிநாடுகளில் பலமாக உள்ளது.**

தொடர்ந்து என்றாலும் யாரும் அதிர்ச்சியடைய வேண்டியதில்லை. எனினும், எந்த அவசரத்துக்கும் நீங்கள் தயாராயிருக்க வேண்டும், என்று நீட்டி இழுத்து, நிலைமையை விளக்கியிருக்கிறார்! எந்த அவசரத்துக்கும் தயாராயிருக்கவேண்டும் (we must be prepared for any emergency) என்றால் என்ன அர்த்தம்? என்ன 'அவசரம்' அப்படி ஏற்படுமென்று கருதுகிறார்— எதற்காகத் தயாராயிருக்கவேண்டும், என்று அறைகூவல் விடுக்கிறார் — அதுவும், வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்திலிருந்து, வந்ததும், ஏன் இதனை வழங்குகிறார்!! என்று எண்ணிடும்போதுதான், காஷ்மீர்ப் பிரச்னை எந்தளவுக்கு

வளர்ந்திருக்கிறது,என்பது விளங்கும்.

*

**பத்தாண்டுகளுக்கு மேலாகிறது.**

**பாராளும் சபையாம் ஐ. நா. முன், பிரச்னை, இன்னும் தீர்ந்தபாடில்லை.**

**படைகள் பல சென்றன!**

**பல கோடி பணம் பாழ்!!**

**இந்தியாவின் நியாயம்பற்றி உலகுக்குச் சொல்ல வி. கே. கே. மேனன் நடாத்திய சுற்றுப் பயணம் பல!!**

**நியாயத்தை வலியுறுத்த விசயலட்சுமி தேவியார் உள்பட, பலர், தூது சென்றதுண்டு—உலகச்சபைக்கு.**

எனினும், பாகிஸ்தானின் தப்புப் பிரச்சாரம், பரவியிருக்கிறதாம், வெளியே! நேருவை உலகமே போற்றுகிறதென்கின்றனர்சமாதானத் தூதரென்று—இந்தியாவின் சார்பில் அவரது சகோதரியே உலக சபையின் தலைவராகவுமிருந்தார் ஒரு முறை—கிருஷ்ணமேனனின் சாமர்த்தியம் யாருக்கு வரும் என்கிருர்கள் — இவைகளுக்கெல்லாம் மேலாக அடிக்கடி நேரு பண்டிதரும் உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடுகளுக்கும் சென்று வருகிருர் — இருந்தும், பாகிஸ்தானின் பிரச்சாரம் பலமாக இருக்கிறதாம்--வெளிநாடுகளில் பாகிஸ்தான் பக்கமே நியாயம் இருப்பதாகக் கூறப்படுகிறதாம் — இதனுல், அச்சப்பட வேண்டியதில்லையாம், ஆயினும் தயாராயிருக்க வேண்டுமாம்!!

சோகம் கப்புகிறது குரலில்—வெளிநாடுகளில் பெற்ற விருதுகள் கூடச் சாதாரணமாகிறது—அழைப்பு விடுக்கிருர், எவ்வித அவசர நடவடிக்கைக்கும் தயாராயிருக்க வேண்டுமென்று! இவ்வளவு பரபரப்பு, பீதி, பயம், நேரு அவர்களுக்கு ஏற்படக் காரணம் என்ன? வெளிநாடுகளில் அவர் சுற்றுப்பயணம் நடாத்தியபோது நார்வேயில் ஒரு நிருபர் கேட்டபோது,

**காஷ்மீர்தானே! அது, தீர்ந்து போன சங்கதி. இந்தியாவுடன், அது இணைந்துவிட்டது. அதைப்பற்றிப் பேசி, இனி, என்ன பயன்?**

என்று ஒரேயடியாகத் தீர்த்துச் சொன்னவர்தான், நேரு. அங்கு சொன்னது மட்டுமல்ல, ஆட்சி நடத்துகின்ற பக்ஷிகுலாம் முகம்மது யார் தெரியுமோ—நேருவின் ஆள், காஷ்மீரத்து மக்கள் என்ன விரும்புகிருர்கள் தெரியுமோ—நேருவின் இந்தியாவில் இணைந்திருக்கவே விரும்புகிருர்கள், பாகிஸ்தானுடன் சேர எவருக்குமே ஆசை கிடையாது, என்றும் இங்கு, பலராலும் பேசப்படுகிறது.

ஆனுல், உண்மை நிலை அதுவா' எனில், ஐயமும் குழப்பமுமே மேலிடுகிறது.

"இந்து" ஏட்டின் தனி நிருபர் அண்மையில்,அழகு ததும்பும்அப்பள்ளத்தாக்குக்குச் சென்றிருந்தாராம். அங்குள்ள அரசியல் நிலைமைகளை விளக்கி, எதிர்காலம் எப்படியாகும் என்கிற கருத்தை அடக்கி கட்டுரையொன்று தீட்டியிருக்கிருர்.

ஒருவரைச் சந்தித்தாராம், நிருபர்! அவர் கேட்டாராம்,

"ஏனய்யா! நேரு, இங்கே ஏன் வரப் பயப்படுகிருர்? ஷேக் அப்துல்லாவைச் சிறையில் போட்ட பிறகு, இந்த நான்கு ஆண்டுகளில் ஒருமுறைகூட இங்கு வரவில்லையே, ஏன்?"

நான்காண்டுகளில் ஒருதடவை கூடப் போகவில்லை, நேரு! ஏனெனில், தானும் அப்துல்லாவும், ஒரே காரில் பவனி சென்று பல்லாயிரக் கணக்கான மக்களுக்கு 'தரிசனம்' அளித்ததையும் பிறகு தானே, அப்துல்லாவைச் சிறையில் பூட்டிட ஒரு காரணமாயிருந்ததையும் எப்படி மறக்க முடியும்? அதனுல், உலகமெலாம் சுற்றி வரும் நேரு பண்டிதர், ஒருமுறையாவது, அங்கு போய்வரவில்லை. அஞ்சுகிருர்!!

அஞ்சக் காரணம்? ஷேக் அப்துல்லாவைச் சிறையில் பிடித்துப் போட்டதால், அவர் விரும்பிய எண்ணம் மடிந்துவிடவில்லை! மாருக ஒரு கட்சியாக உருவெடுத்திருக்கிறது — அதுதான், **வாக்கெடுப்பு கட்சி!!**

பெயரே, விளக்கிடும் அக்கட்சியின் கொள்கையை - வாக்கெடுப்பு நடாத்தி, **காஷ்மீரம் ஒரு தனிநாடாக விளங்க வேண்டும்** என்பதுதான் அப்துல்லா, கொண்ட ஆசை. அதைக் கேட்டதும்தான், நேரு பண்டிதருக்கு அச்சம் பிறந்தது —நண்பராக யிருந்தாலும், தன்னேடு தோளிணைந்து தோழமை கொண்டிருந்திடினும், இப்படி தனியரசு விரும்புகிருர் என்றதும் அவரைப் பிடித்துச் சிறைக்குள் பூட்டினர்—பக்ஷிகுலாம் என்பார், பிரதமராக்கப்பட்டார்!!

*

நான்கு ஆண்டுகள் ஓடிவிட்டன—அப்துல்லா சிறைக்குள்ளேயிருக்கிருரே ஒழிய, அவரது ஆசைகள் கட்சி உருக்கொண்டு, பெரிதாக வளர்ந்து வருகிறதாம்! இதற்கு, பாகிஸ்தானியர் வேறு, மறைமுகமாக ஆதரவு தந்து கொண்டுள்ளனராம்!! அண்மையில் நடைபெற்ற காஷ்மீர் பொதுத் தேர்தலில், காஷ்மீர் சட்டசபை மன்ற சபாநாயகராயிருந்த **குலாம் ரசூல் ரென்சு;** என்பார் தோற்கடிக்கப் பட்டிருக்கிருர். இவரும், கல்வி மந்திரியாக யிருப்பவரும், பிரதம மந்திரியின் போக்கை எதிர்க்கிருர்களாம்! அதாவது, ஆளுகின்ற கட்சியான **தேசீய மாநாடு** கட்சிக்குள்ளேயே, இரண்டு முகாம்கள் உள்ளனவாம்!!

ஒரு முகாமைச் சேர்ந்த இந்த ரசூலை, தேர்தலில் ஒழிக்க, பிரதமரின் ஆட்களே முயன்றனராம். தோற்ற இவர் M. L. C. யாக வர முயன்றபோது, கூடாதெனப் பிரதமர், அனுமதி மறுத்துவிட்டாராம். தேசீய மாநாடு கட்சிக்கும், பிரதமரான பக்ஷி குலாம்தான் தலைவர்!!

இப்படி, கோட்டைக்குள்ளேயே குத்து வெட்டு நடந்துகொண்டிருக்கிறது — அங்கே! ஆளும் கட்சிக்கு எதிரான அப்துல்லா கட்சியோ, வளர்ச்சி பெற்றுக் கொண்டு வருகிறது!!

நேருவின் ஆதரவைப் பெற்ற தேசீய மாநாடு கட்சி, அண்மையில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்று, இந்த கிழமை புதிய மந்திரி சபையையும் அமைக்கவிருக்கிறது. பக்ஷியும், டில்லி வந்திருக்கிருராம், கலந்து பேச! ஆனுல், அப்துல்லாவைச் சிறையிலடைத்துவிட்டு நடந்த தேர்தல் இதுஎன்பதைச் சொல்ல வேண்டியதில்லை-அவர் வெளியேயிருந்து ஆளும் கட்சிக்கு எதிராக அணிவகுப்பைத் திரட்டினுல், நேருவின் ஆசை என்னவாகும் என்று சொல்ல முடியாது!!

**ஒரு பக்கம் கட்சிக்குள்ளேயே தகராறு.**

**இன்னெரு பக்கம், புதியதோர் எதிர்ப்பு அணி உருவாகிறது,**

இது மட்டுமின்றி, காஷ்மீரச் சர்க்காரிலுள்ள, பெரிய பெரிய அதிகாரிகளும், ஆங்காங்கேயிருக்கும் சில்லரை அதிகாரிகளும், தற்போதுள்ள ஆட்சியின்மீது மிக மிக அருவருப்பு கொண்டுள்ளனராம். முஸ்லிம்களே அதிகம் என்பதால், பலருக்குப் பாகிஸ்தான்மீது பாசமும், வேறு பலருக்கு தனித்து வாழும் ஆர்வமும் உள்ளதாம்.

இந்தக் குறையை எப்படித் தீர்ப்பது? — அதனால், பிரதமர் பக்ஷிகுலாம், 'பாகல்மேடு' செய்கிறாராம்! ஒவ்வொரு வாரம் சனிக்கிழமைதோறும், தன்து அறையில் உட்கார்ந்துகொண்டு, இருப்பாராம் பிரதமர். அன்றையதினம் முன்னறிவிப்போ, அனுமதியோ எதுவுமின்றி எவரும், பிரதமரைப் பேட்டி கண்டு குறைகளைச் சொல்லலாமாம். உடனே, பிரதமர், சம்பந்தப்பட்ட அதிகாரியை போனில்' கூப்பிட்டு நேரே வரச் சொல்லி, மனுதார் எதிரிலேயே கோரிக்கையைப் 'பைசல்' செய்கிறாராம்! இது மட்டுமன்றி, வெளியூருக்குப் போனாலும், இதே முறையைக் கையாள்கிறாராம்— இதனால் தனக்கும் பொதுமக்களுக்கும் தொடர்பு ஏற்படும், அதிகாரிகள் தன் ஆட்சிக்கு முட்டுக்கட்டையாக யில்லாமல் தடுக்கலாம் என்று பக்ஷிகுலாம் முனைந்து வந்தாலும், இது எத்தனை நாளைக்குச் சாத்யம், வளர்ந்துவரும் அதிருப்தி என்னவாகும் என்கிற உறுதியில்லை, இங்கே!!

*

இப்படி, அல்லாடும் நிலையிலிருக்கிறது, காஷ்மீர்.

இதற்குத்தான், வக்காலத்து, படைவரிசை, பணசகாயம், ஐந்தாண்டுத் திட்ட உதவி, அத்தனையும் அளிக்கிறார் நேரு பண்டிதர்! இருந்தும், இவர் குரல் ஏறவில்லை — அங்குள்ளோர் பொது வாக்கெடுப்பு நடத்தியே ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்கின்றனர் — என்ன ஆகுமோ என்று இதில் பண்டிதர் அவ்வளவு அக்கறை காட்டாமலிருக்கவே, பாகிஸ்தான் பிரச்சாரம் பலமாகக் கேட்கிறது வெளிநாடுகளில்! யாராவது கேள்வி கேட்டால், "அது தீர்ந்து போன விஷயம். காஷ்மீரும் இந்தியாவும் ஒன்றே!" என்று பதிலளித்துவிடுகிறார்.

இதே பதிலையாவது நேரு உறுதியுடன் கூறுகிறாரா என்றால் இல்லை. நார்வேயில் கேள்விக் கேட்ட நிருபரிடம், இந்தியாவுடன் காஷ்மீர் இணைந்துவிட்டது", என்று பதில் தந்த நேரு, இலண்டனில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையில்,

"பொது வாக்கெடுப்பு நடத்துவதைப் பற்றி இந்தியாவுக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், பாதுகாப்பு சபையின் விதிகளுக்குப் பாகிஸ்தான் சம்மதிக்கவேண்டும்." என்று தெரிவித்திருக்கிறார்—இப்படி, தெளிவு இல்லாமல் பிறக்கும் பதில்கள், காஷ்மீரத்திலிருக்கும் மக்களிடையே, இந்தியாவைப் பற்றி ஐயத்தை வளர்த்து வருகிறதாம்—கூறுகிறார், இந்து நிருபர்!!

இந்த நிலையில், வெளிநாடு சென்று விருதுகள் பெற்று வந்த நேரு அவர்கள், வந்ததும் வராததுமாய் சோகத்தையும் எச்சரிக்கையையும் தருகிறார்! பாகிஸ்தானைவிட, நேருவுக்கு, உலக நாடுகளில் பிரச்சார பலம் அதிகம் ஊருக்கு ஊர் தூதர்கள் — பறந்து வரும் கிருஷ்ணமேனன்— வல்லரசுகளிடையே செல்வாக்கு —இத்தனையும் இருக்கிறது. இந்தியாவின் சாதனைகளைப் பற்றி எடுத்துச் சொல்ல, ஏராளமான பிரச்சார கேந்திரங்கள் உள்ளன! நேரு வெளிநாடுகளுக்குச் சென்றால் அங்கே கிடைத்த ஆரவாரம், சூட்டப்பட்ட மாலைகள், அணிவகுத்து நின்றோரின் எண்ணிக்கை, இறங்கியபோது எத்தனை தடவை புன்சிரிப்புகளைச் சிந்தினார் என்கிற விபரம், இத்துணையும் தர ஏராளமானோர் இருக்கிறார்கள்! இருந்தும், பாகிஸ்தானின் தப்புப் பிரச்சாரமே பலம் பெற்று இருக்கிறதெனின், என்ன பொருள்? ஒன்று, இவையாவும் வீண் என்பது! அல்லது, நேருவின் குரலைவிட, பாகிஸ்தானிடம் தெளிவு இருக்கிறது, என்பது தானே!!

என்னதான் சொன்னாலும், எவ்வளவுதான். உரிமை கொண்டாடினாலும், வாக்கெடுப்பு நடத்த, இந்தியா அஞ்ச அஞ்ச, நேருவின் 'கையில் வலுவில்லை என்றே உலகம் கருதும்! எங்கு சென்றாலும், அருகிலுள்ள சிறு காஷ்மீரப் பிரச்சினைக்கு சமாதானம் காண இயலாத நீங்களா, உலகத்துக்கு 'ஒளி' தரப் புறப்பட்டு விட்டீர்கள் என்று கேட்கத்தான் கேட்பார்கள்!! சோகித்து என்ன பயன்?

எச்சரிக்கிறார், அதன் விளைவாக —எந்த அவசரத்துக்கும் தயாராயிருக்கவேண்டுமென்று! அவசர நடவடிக்கை என்றால், என்ன? போர்தானே!! அது தவிர, வேறு வழியென்ன இருக்கமுடியும்? இப்படி, பாகிஸ்தான் படைகளும், இந்திய ராணுவமும் மோதிக்கொள்வதற்குப் பெயரா அமைதி — சமாதானம்? அப்படியே மோதிக்கொண்டாலும்தான் என்ன பயன் விளையும்! அமெரிக்கா, பாகிஸ்தானுக்குப் பின்னால்; ரஷ்யா போன்ற ஒரு வல்லரசு இந்தியாவுக்குப் பின்னால் வரக்கூடும். பிறகு!! காஷ்மீரம், உலகப்போர்க்களமாக, மாறும். இதுதெரியாதவரா நேரு? எதையெதையோ, எதிர்பார்த்தோம்—கண்ட நாடுகளின் காட்சிகளை விளக்கி, அதன் மூலம் படமும் பாடமும் அளிப்பார் காங்கிரஸ் புரியினருக்கு, என்று எதிர்நோக்கினோம். விருந்தும், கலாரசனையும் பெற்றுத் திரும்பிய அப்பெரியவர், உருவான விஷயங்களைத் தரவில்லை — ஓலக் குரலும் ஓங்காரக் கூச்சலையுமே அளிக்கிறார்! அந்தோ, பரிதாபம்!!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

பேரவையிலேயே கேட்கப்படுகிறது! நாட்டு மக்களின் கவனத்தை ஈர்க்கிறது!! எனவே, இது உடனடியாக ஒழிக்கப்பட வேண்டியதாகும்; அவசரமாக நடவடிக்கை எடுத்து இவர்களை ஒடுக்குங்கள்—காலம் கடந்துவிடு முன் காரியமாற்றுங்கள்—என்று டில்லி அரசுக்குக் கலகமூட்டுகிறார்கள் என்பதுதான், இத்தனை ஏடுகளும் இது குறித்து எழுதுவதிலே உள்ள உட்பொருள் என்று நான் எண்ணுகிறேன்.

வரி அதிகம், தொழில் குறைவு' அறியாமை அதிகம் கல்விக்கூடங்களின் தரம் மட்டம்; விவசாயம் செழிக்கவில்லை, வாணிபம் ஓங்கி வளரவில்லை, என்பன போன்றவைகள் குறித்துப் பேசுவோரும், அறிவுத் தெளிவும் செயலாற்றும் திறனுமற்றோர், இடத்தைப் பிடித்துக்கொண்டு, ஆட்சியை அலங்கோலமானதாக்கிவருகிறார்கள், இவர்களை விரட்டிவிட்டால், வல்லமையும் வாய்மையும் நிரம்பப் படைத்த நாங்கள் ஆட்சியை ஏற்றுநடாத்த வந்திடுவோம், அப்போது கூனன் நிமிர்ந்து நடப்பான், குருடன் விழி பெறுவான் என்றெல்லாம் பேசுபவர்களும் மட்டுமே நாம் அறிந்திருக்கிறோம், இந்தப் 'புதியவர்களோ' நம்மை நிந்திக்கின்றார்கள் இல்லை, நமது அறிவாற்றலைக் குறைத்து பண்பற்ற முறையில் பேசிடவும் இல்லை; ஆனால் நம்மையும் சொக்கவைத்திடும் வசீகரம் படைத்த ஒரு தத்துவத்தை, கொள்கையை, ஆழ்ந்த நம்பிக்கையின் அடிப்படையில் உருவாகியுள்ள கொள்கையை, அழுத்தந் திருத்தமாகக் கூறி வருகிறார்கள்; அவர்கள் கூறக் கூற, நாமே அல்லவா, உண்மையின் பக்கம் அழைத்துச் செல்லப்படுவது போன்றதோர் உணர்ச்சி ஏற்பட்டு விடுகிறது, என்று எண்ணி, அமைச்சர்கள் சங்கடப்படுகிறார்கள்.

எப்போதும் இதே பேச்சா? எதற்கெடுத்தாலும் இந்தப் பேச்சா? ஒவ்வொரு பிரச்சினையின் போதும் இதே 'பாணி' தானா!— என்றெல்லாம் கேட்கிறார்கள்.

சிலர், தம்பி, முகத்தைக் கூடச் சுளித்துக்கொள்கிறார்கள் -ஆனால் அவர்கள், நாம் பேசுவது கேட்டுத்தான் அப்படி அருவருப்படைகிறார்கள் என்று நான் கருதவில்லை — நம்மைப் பார்க்கும் போதே அருவருப்படைகிறார்கள் —அகத்திலே உள்ள ஆயாசம் முகத்திலே தோன்றும் விசாரத்தால் தெரிகிறது. நான் பரிதாபப்படுகிறேன்— கோபங்கொள்ளவில்லை.

நம்மையும் நாம் கூறிடும் கொள்கையின் தன்மையையும் இவர்கள் புரிந்துகொள்ளும் நாளும் வாராதா? புரிந்துகொள்ளும் பொன்னாள் புலர்ந்தால், இன்று கடுமையைப் பொழியும் கண்களிலிருந்தே கனிவு வழியாதா, என்றுதான் நான் ஆவலுடன் காத்துக் கிடக்கிறேன். அந்த நாளும் வந்திடாதோ? என்று ஆவல் என் நெஞ்சத்தில் நிறைந்து இருப்பதால், கோபம் புகக்கூட இடமில்லை.

நமது 'இலட்சியம்' அவர்களுக்குப் புரியாததால், நமது பேச்சு இனிப்பளிக்கவில்லை—நாம் நமது இலட்சியத்தை எடுத்துப் பேசும் காட்சியே கூட அவர்கட்குக் கடுங் கோபத்தை மூட்டுகிறது! மெத்தக் கஷ்டப்படுகிறார்கள்!!

ஒன்று, என்னாலே நன்றாக உணர்ந்து கொள்ள முடிகிறது. சட்டப் பேரவைக்கு உள்ளே நான் காண்பதிலிருந்தும் சரி, வெளியே காணக் கிடைப்பதிலிருந்தும் சரி; தம்பி, நாம் கூறிடும் கருத்து, **கேட்போர் உள்ளத்தைத் தொடுகிறது!** அவர்களில் சிலருடைய உள்ளத்திலே அவை இடம்பெறவில்லை— இன்னமும்; ஆனால் தொடுகிறது!

இது, நமது இயக்கம் பெற்று வரும் வளர்ச்சியிலே மிக முக்கியமான ஒரு கட்டமாகும்.

அரசியல் வரலாற்றினை ஆய்ந்து அறிந்தவர்கள் எவரும் இந்த 'கட்டத்தின்' முக்கியத்துவத்தை நிச்சயம் உணருவார்கள்.

பலாப்பழத்தில் மொய்த்துக் கொள்ளும் ஈக்கள்போல, இலாபம் தரத்தக்க பக்குவம் பெற்ற நிலையில் உள்ள கட்சிகளிலே இடம் தேடிக்கொண்டவர்களைக் குறித்து, நான் கவலைப்படவில்லை.

மரம் பழுத்தால் வௌவால் வட்டமிடும்! இதற்கு ஒரு அழைப்பு தேவையா!!

தம்பி! நான் கவலையுடன் கவனிப்பது, உண்மையிலேயே காங்கிரஸ் கட்சியில் நீண்டகால ஈடுபாடு கொண்டதால், அதன் சார்பில் கஷ்டநஷ்டம் ஏற்றுக்கொண்டதால், அதன் சாதனைகளில் பங்குகொண்டிருப்பதாலே, அந்தக் கட்சியிடம் பற்றும் பாசமும் மிகுந்த அளவுக்குக் கொண்டு, அதன் காரணமாகவே, நாம் எடுத்துக் கூறும் 'இலட்சியம்' தீதானது, கேடானது என்று நம்பி, காது கொடுத்துக் கேட்பதும் தவறு, காதில் வீழ்ந்தால் கடுங் கோபம் கொள்ளத்தான் வேண்டும், சுடு சொல் கூறிடத்தான் வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களே, அவர்களைத்தான்!

அகப்பட்டால் சுருட்டுபவர்கள் கெண்டையை வீசி விராலை இழுப்பவர்கள்-இவர்கள் குறித்து நான் கவலைப்படவில்லை. அத்தகையவர்கள், எங்கிருந்தாலும் ஒன்றுதான்! என்ன பேசினாலும், அதற்கு ஒரே ஒரு நோக்கம்தான்! —இலாபம்! — வேறு இருப்பதற்கில்லை.

தூய்மையான தேசத் தொண்டாற்றியவர்கள், நாம் எடுத்துக் கூறிடும் இலட்சியத்தைப் புரிந்து கொள்ளாத காரணத்தினால், கடுகடுப்பும் சிடுசிடுப்பும் காட்டுகிறார்களே—அவர்கட்கு இன்று நாம் சட்டப் பேரவையில் பணியாற்றிடும் காட்சியே, கண்ராவியாக இருக்கிறது; உணர்ச்சி வயப்படும் இத்தகையவர்கள்மட்டும், நமது கொள்கையின் நியாயத்தை உணர்ந்துகொள்ளத்தக்க அளவுக்கு இதிலே தெளிவு பெற்றுவிடுவார்களானால்— எண்ணும் போதே, தம்பி, தித்திக்கிறது— இதிலே ஈடுபாடு கொண்டுள்ள நாம் நடாத்தும் செயலை இனியன என்றுதானே இவர்கள் கொள்ளுவார்கள்!

பொறுமையுடனும் பொறுப்புணர்ச்சியுடனும் பணியாற்றிக் கொண்டுவந்தால். அவர்களிலே எத்துணையோ பேர், மனம் மாறி, நமது நியாயமிக்க கொள்கைக்கு நிரம்ப வலிவு அளித்திடுவார்கள்.

நான், இந்த எண்ணத்தை எப்போதும் மறவாமல் பணியாற்றுவதனால்தான், நான் சிலர் பகைக்கினாலும் பதறுவதில்லை; கடுமொழி புகன்றாலும் கோபிப்பதில்லை; முகம் சுளித்தாலும் வருந்துவதில்லை; கதிரவனைக் கண்டல்

லவா கமலம் மலருகிறது — நாம் நமது கொள்கையை எடுத்துரைப்பதிலே பெற்றுள்ள ஆற்றல் போதாது—கமலம் மலரவில்லை—காரணம் கதிரொளி கிளம்பவில்லை —என்றுதான் எண்ணிக்கொள்ளுகிறேன்.

தம்பி! உன் நோக்கமும் இதுவாகவே இருத்தல்வேண்டும் என்பதற்காகவே, இதனைச் சற்று விரிவாகவே எழுதினேன்.

**இனியன கேட்பின்**
**என்னரும், தம்பி!**
**இனிது இனிது**
**இலட்சியம் இனிது**
**அதனினும் இனிது**
**அதன் பகைவர்கள்**
**அடுத்ததன் நண்பராய்**
**ஆகுதல் அன்றோ!**

என்று கூறிடத் தோன்றுகிறது. தமிழாசிரியர் துணை கொண்டு சீரும் தளையும் செப்பனிட்டுக் கொள்வாய் என்ற துணிவில், குறைநிறை கவிதை வடிவம் கொடுத்துவிட்டேன்.

தம்பி! தத்தமது கட்சிகளை எப்பாடுபட்டேனும் வளரச்செய்ய வேண்டும்,அதன்மூலம் ஆதிக்கம் நடாத்தி இன்பம் காணவேண்டும் என்று கருதுபவர்கள், நாம் காரணம் ஆயிரம் எடுத்துக்காட்டினாலும், கனிவுடன் பேசினாலும், அவர்களுக்கு அளித்திடவேண்டிய உரிய மரியாதையைத் தந்தே உரையாற்றினாலும், நமது கொள்கைக்கு வரவா செய்வர்? என்ற எண்ணம் எழத்தான் செய்யும்.

அமைச்சர் அவையினரை நோக்கி, சட்டப் பேரவையிலே நான், "நீவிர் அறிவும் ஆற்றலும் உள்ளவர்கள்; மக்களுக்கு நல்லன செய்தல்வேண்டும் என்பதிலே அக்கரை கொண்டும் இருக்கின்றீர்கள் — ஆனால் உமக்கு போதுமான அதிகாரம் அளிக்கப்பட்டில்லை. வடக்கே குவிந்து விட்டிருக்கிறது" என்று பேசினேன் — பத்திரிகையைப் பிறகு புரட்டிப் பார்த்தாலோ, தமிழ்நாடு காங்கிரசின் தற்போதையத் தலைவர் — தற்காலிகத் தலைவர் என்றும் கூறுகிறார்கள் — **தி. மு. க.காரர்கள் அரசியலுக்கு இலாயக்கில்லை** என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறிவிட்டார் என்ற செய்தியைக் காண்கிறேன்!

நானும் நமது கழகத்தவரும் அமைச்சர் அவையினருக்கு அறிவும் ஆற்றலும் உளது என்பதனை சட்டப்பேரவையில் கூறி, எமது பண்பினைத் தெரிவித்தோம் -காங்கிரஸ் கட்சித் தலைவரோ,"நாங்கள் அரசியலுக்கே இலாயக்கில்லை" என்று அழுத்தந்திருத்தமாகக் கூறுகிறார்!

பண்பு தேவையில்லை என்று ஒதுக்கிவிடுவோருக்கு நாம் எங்ஙனம் தந்துதவமுடியும்?

நம்மை அரசியலுக்கு இலாயக்கில்லை என்று திருமங்கலத்துத் திருவாளர் கூறிவிட்டாரே,என்று வருத்தப்பட்டுப் பயன் என்ன?

சட்டப் பேரவையிலே, நமது தோழர்கள் பேசிய பேச்சிலே காணக்கிடைக்கும் பண்பும் கண்ணியமும், வெட்ட வெளியிலே காங்கிரஸ் தலைவர் பேசியதிலே நெளியும் கண்ணியக் குறைவும், நேர்மையாளர்களாலே ஒப்பிட்டுப் பார்க்கப்படாமலா இருந்துவிடும்?

2-ம் பக்கத் தொடர்ச்சி

களில் ஈடுபட்டவர், டாக்டர். அவரால், உருவானோர், பலர்! அவரால், சுதந்திர தேவிக்கு, சூடப்பட்ட தியாக மலர்கள் ஏராளம்! சொந்த வாழ்க்கையில் இடியும் மின்னலும் தாக்க, பொதுத் துறையிலும் தண்டனையும் சந்தேகப் பார்வையும் இடியென விழ, எனினும் கொண்ட கொள்கைக்காக தன் வாழ்வின் நாட்களை அர்ப்பணிக்க அஞ்சவில்லை. அதனால் அவரை, '**தென்னாட்டுத் திலகர்**' என்று அழைப்பார்கள். அவர், தொண்டராக மட்டுமின்றி, தமிழ் நாட்டுக் காங்கிரசுக்கும் தலைவராக இருந்ததோடு, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலும் உறுப்பினராக இருந்து, உழைத்திருக்கிறார் தன் மனதில் தோன்றிய எண்ணங்களை வெளியிட்டு தன் பாதையில் பல்லாயிரக் கணக்கானோரை இழுக்க, "பிரபஞ்ச மித்திரன்", "இந்தியன் எக்ஸ்பிரஸ்", "தமிழ்நாடு",எனும் ஏடுகளையும் துவக்கி நடத்தினார்.

இப்படி வாழ்நாள் பூராவும், மக்களுக்காகப் பணிபுரிந்த டாக்டரின் மறைவு, தமிழ் நாட்டு அரசியலிலிருந்து ஒரு முதியவரைக் கொண்டுபோய் விட்டது. வாலிபர்களுக்கு ஒரு ஆசானைப் போலவும், காங்கிரஸ் கட்சியினருக்கு கடமையை யுணர்த்தும் கண்ணியராகவும் விளங்கிய அவரிடம் தென்பட்ட ஒரு நற்பண்பினை எவரும் மறந்துவிட முடியாது. மாற்றுக் கொள்கை கொண்டோர்களாயினும் அவர்களிடமும் அன்பு காட்டி பண்போடு நடந்து கொண்டதுதான்! இதனால், அவருடைய மறைவை, காங்கிரஸ் கட்சி மட்டுமல்ல, ஏனையோரும் ஒரு பெரு இழப்பென எண்ணுகின்றனர்!! அவருடைய சேவையைப் பாராட்டி ஈராண்டுகளுக்கு முன் சென்னையில் விழா நடைபெற்றபோது, தி. மு. க. -வும் மனமகிழ்ச்சியுடன் கலந்துகொண்டது—அவரது சேவைக்குத் தனது மரியாதையையும் தெரிவித்துக்கொண்டது. இவ்விதம், எல்லாத் தரப்பினராலும் மதிக்கப்பட்ட, டாக்டர் அவர்கள், இங்கேயில்லாது வடநாட்டில் பிறந்திருப்பாரேயானால் ஏதேதோ பதவிகளையும் உயர் சிறப்புகளையும் பெற்றிருக்கக்கூடும். ஏனெனில், காந்தியார் காலத்தில், தென்னாட்டில் காங்கிரஸ் பரவப்பாடுபட்டவர் இவர்! ஆனால், தாழ்வுற்றவர்களாகவே கருதப்படும் இங்கே இவர் பிறந்ததால், பலரைப்போல அன்புப் பண்புடன் நடந்து கொண்டதால், சாதாரண 'கவர்னர்' பதவிகூட அளிக்கப்படவில்லை—'பாரத ரத்னம்', 'பத்மவிபூஷணம்' கூட எட்டிப் பார்க்கவில்லை. அந்திய காலத்தில் தனது பெருங் குடும்பத்துடன் நிம்மதியாகக் காலங் கழிக்க, பாடுபட்ட கட்சியால், பதவி மூலம் பலன் பெறுதவர், டாக்டர்.

உண்மையில், அவருடைய இழப்பு, நாட்டுக்கு மட்டுமல்ல நமக்கும் ஒரு நஷ்டம் என்போம்! அரசியல் கருத்து மாறுபாடுகளிருந்திடினும், அறிவியல் துறையில் அவருக்கு நமது கொள்கைகள் வளர்வதில் ஆர்வமும் ஆசையும் இருந்ததையும், நமது நேர்மையுள்ளத்தைக் கண்டு மகிழ்ச்சி கொண்டிருந்ததையும் நாம் மறந்துவிட முடியாது!! அத்தகைய ஒரு அரசியல் கிழவரை, தியாகச் செம்மலை, இனி எவரும் காண இயலாது என்று எண்ணும்போது மனம் வேதனையடையவே செய்யும். அவரது குடும்பத்தாருக்கு நமது அனுதாபங்களையும், இறந்த பெரியாருக்கு நமது மரியாதைகளையும் செலுத்துகிறோம். வளர்க, அறநெறி! வாழ்க அவர் நாமம்! ★

"தாக்குகிறார்! தாக்குகிறார்!" என்று தாசர் கூட்டம் மகிழக் கூடும் — அதற்கான கூட்டமும், போதுமான அளவுக்குக் கூடுவதில்லை. ஆனால் அறிவாளர்கள், 'புத்தம்புதியவர்கள், இளையவர்கள், தீவிரமாகப் பேச வல்லோர், சட்டப்பேரவையிலே எத்துணைப் பண்புடன் பேசுகின்றனர், தமிழ் நாட்டுக் காங்கிரசின் தலைவர் ஏனோ, இத்தகு சுடுசொல் கக்கினார், கண்ணியத்தைவிட்டு விலகினார், பண்பினை மறந்தார், என்று எண்ணிப் பார்த்திடத் தான் செய்கின்றனர்.

நாம் 'தாங்கிக்கொள்கிறோம்' அவர்களோ, தாக்குதலை நடத்தி நடத்திப் பயன்காணாததாலே தவிக்கிறார்கள்.

அரசியலுக்கு இலாயக்கில்லை என்று இவர் கூறட்டும் — பரவாயில்லை — இலாயக்குள்ளவர்கள் என்று 17 இலட்சம் வாக்காளர் பெருமக்கள் அறிவித்துள்ளனர் - அதுமட்டுமல்ல—வேறொன்றினையும் அறிவித்துள்ளனர் — இந்த விற்பன்னர் — எவரெவர் சட்டசபைக்கு உரியவர் என்று தீர்ப்பளிக்கும் திறம் படைத்தவர், சட்டசபைக்குத் தேவையில்லை என்றும் தீர்ப்பளித்துள்ளனர்.

இதனையும் நாடு அறியும் —நல்லோர் அறிந்தே உளர்.

நாத்தழும்பேற நம்மை நாத்திகர் என்றனர்—நன்மதி படைத்தோர், அந்தப் பழிச்சொல்லை, ஏற்க மறுத்தனர்.

நாசவேலைக்காரர்கள் என்று கூசாமல் கூறினர்—மக்கள் மன்றத்து மாமணிகளோ, வடிகட்டின பொய்யை வல்லமையினால் மெய்யாக்க முயற்சிக்கும் இவர்தம் போக்கை எள்ளி நகையாடினர்.

அரசியலுக்கு மட்டுமல்ல, தம்பி சமூகத்திலேயே, நாட்டிலேயே, இவர்கட்கு இடம் இல்லை—இருந்திட இலாயக்கு இல்லை என்று இவர் போன்றார் பேசினர்—நாடு, இத்துணை ஆணவப் போக்கு எத்துணை நாட்களுக்கு என்று கேட்டு, எள்ளி நகையாடிற்று.

வெட்கமேனும் இவர்தம் உள்ளத்தில் உறுத்தினால், நாமோ என்னென்ன பழிகளைச் சுமத்தலாமோ அவ்வளவும் சுமத்திப் பார்த்தோம் — கடுமொழியினைக் கொட்டினோம்—சட்டம் கொண்டு தாக்கினோம்— சபித்தோம்—சந்துமுனைச் சிந்து பாடி நிந்தித்தோம் —எல்லாம் குறைவறச் செய்தும், காண்பது என்ன? கழகம் கருகி வருகிறதா? மக்கள் விலகிச் செல்கின்றனரா? ஆதரவு அழிந்து பட்டதா? இல்லையே! நாள் தவறாமல், நாலாறு இடங்களிலே அந்தக் 'குரல்' அல்லவா கேட்கிறது! விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் விதண்டாவாதம் பேசிக்கொண்டு தமிழகத்தில் நடமாடித் திரிகிறார்கள் என்று நையாண்டி பேசியது போய், இன்று 'எங்கும் இரண்டொருவர் இருந்துகொண்டு, 'அடுக்குமொழி பேசி மயக்கி' வருகிறார்கள், இவர்களை இனியும் விட்டு வைத்தலாகாது, என்று பேசிடும் நிலையன்றோ வந்து சேர்ந்தது? பலகாலும் பழி கூறிப் பலன் ஏதும் காணோமே, இனியும் அதே முறையில் இருந்திடின், காணப்போகும் பலன் என்ன இருக்கிறது? என்றாவது எண்ணுவர். எண்ணினரா? இல்லை! ஆசை வெட்கமறியாது என்றுதான் ஆன்றோர்களே கூறிவிட்டனரே! மீண்டும் மீண்டும், அரைத்த மாவையே அரைக்கிறார்கள் — அவர்கட்கு அலுப்புதான் அதிகமாகிறதே ஒழிய, கழகத்துக்கு மக்கள் அளிக்கும் ஆதரவுகுன்றவில்லை, குறையவில்லை, குன்றின் மேலிட்ட விளக்கென ஒளிவிட்ட வண்ணம் இருக்கிறது.

சென்னை பெரம்பூரில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிவிட்டு, காஞ்சி வந்து இதனை எழுதுகிறேன், தம்பி, நாளை மீண்டும் சென்னையிலே கூட்டம்!

நான் மட்டுமல்ல—நமது கழகப் பேச்சாளர்கள் யாவருக்குமே, இதே முறையில், வேலை மிகுதி இருந்திடக் காண்கிறேன்.

இந்த இடையறாத பொது மக்கள் தொடர்பு வீண்போகும் என்றா, ஒரு இயக்கத்தில் ஈடுபட்டவர் எண்ணுவது? இந்தத் தொடர்பு, எதன் விளைவு? என்பதனையாவது எண்ணிப் பார்த்தாரோ! இல்லை என்றல்லவா அவர் பேச்சு காட்டுகிறது! இதற்கு, வளரும் சக்தியைக் கூர்ந்து கவனித்து மதிப்பிடுவது தேவை—வேண்டாமய்யா, அத்தனை பெரியவருக்கு இத்தனை கடினமான வேலை தர வேண்டாம்; மிகச் சாதாரணமாகப் புரிந்து கொள்ளக் கூடியதையுமா இவர் மறந்து நிற்கவேண்டும். மமதை மதியை அடியோடு அழித்து விட்டதே, வருந்துகிறேன், தம்பி, நிச்சயமாக வருந்துகிறேன்.

நாம் பேசுவதோ பயனற்றவை, போக்கோ பொருளற்றது, ஆற்றலோ அடியோடு இல்லை, அறிவோ சூன்யம்-சரி-அங்ஙனமே இருக்கட்டும்—இத்தகையவர்களை நாள் தவறாமல் பல்லாயிரவர் சந்தித்திடவும், உரையாடவும், சொல் கேட்கவும் துடிப்பானேன்?

எனக்கு உண்மையில் விளங்கவில்லை—எவரெவர் அரசியலுக்கு இலாயக்கு என்பதனைக் கண்டறியும் திறமை இருப்பதாகக் காட்டிக் கொண்ட வித்தகர், இந்த விசித்திரத்துக்கு விடை அளிப்பாரா?

நான், கழகத்தின் சார்பில் வாதாடும் போக்கிலேகூட இப்போது இதனைக் கூறவில்லை, தமிழ் நாட்டு நடவடிக்கைகளை கூர்ந்து கவனிப்பவன் என்ற முறையிலேயே கூறுகிறேன்; அமைச்சர் பெருமான்களும், அந்தப் பெருமை அதிக நாள் கிடைக்காது ஆயாசப்படுவோரும் அடுத்த முறை எனக்குத்தான் எனக்குத்தான் என்று ஆவல் ததும்பும் உள்ளத்துடன் இருப்போரும், பொன்னும் பொருளும் மிக்கோரும் புலமையைத் துணை கொண்டோரும், எல்லோரும் தானே, கூடிக்கூடி காடெங்கும் ஓடி ஆடி, கழகத்தைக் கடுவிஷமென்றும் காட்டுத் தீ என்றும், நாசவேலை என்றும், நாத்திகமென்றும், சூது என்றும் சுயநலமென்றும், மயக்கமென்றும் மதியீனமென்றும், பலப்பல கூறினர்; பலன் என்ன கண்டனர்?

பட்டி தொட்டி எங்கும் பட்டொளி வீசிப் பறந்திடும் நமது கழகக் கொடிகளைக் காணுகின்றனர்!

பட்டினமும் பாக்கமும், நமது கழக விளக்கம் கேட்கும் கோட்டங்களாவதைக் காண்கின்றனர்.

நள்ளிரவு வரையிலும்கூட தாழ்ந்த தமிழகம் மீண்டும் எழுந்திட வழிவகை யாது என்பது குறித்து நமது தோழர்கள் பேசுவதைக் கேட்டிட பல்லாயிரவர், ஆர்வம் கொந்தளிக்கும் உள்ளத்துடன் ஆவலாக இருப்பதைக் காண்கின்றனர்.

பழி பேசிப் பகை வளர்த்திட எண்ணமிடும் தலைவர்களின் பெரும்பாலோர் இல்லங்களிலேயே நமது கழக இலட்சிய முழக்கம் எழக் கேட்கின்றனர்.

'எங்கும் நிறைநாத'மாகிவிட்ட இந்த எழுச்சியை, இன்னமும் ஏளனத்தினாலும் பழி பேசுவதாலும், தூற்றுவதாலும் துடுக்குத்தனமாகத் தாக்குவதாலும் அழித்தொழித்திட முடியும் என்று, இவர்கள் கருதுவார்களானால், தம்பி, நாம் பரிதாபப் படுவது தவிர, வேறென்ன செய்ய முடியும், நீயே கூறு, கேட்போம்.

இவர்களின் காரணமும் பொருளும் அற்ற கடும் தாக்குதல், இவர்தம்குணம் யாது என்பதனை நாடறியச் செய்கிறது; இவர்தம் சுடுமொழிகளைத் தாங்கிக் கொண்டு நாம் நமது கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து பணியாற்றியபடி இருந்திடும் பண்பும், நாட்டுக்குத் தெரிகிறது.

தெரிந்ததும், தொலைவில் நின்றோரெல்லாம், தோழராகின்றனர்; கழகம் வளருகிறது!

அழகு தமிழும் அடுக்கு மொழியும், நமது கழக வளர்ச்சிக்குக் காரணம் என்கிறார்கள்!

தமிழ் மொழி வண்ணமும் வளமும் மிக்கது, ஐயமில்லை; அதன் துணை பெற்றோர் தொடங்கும் செயலுக்கு சீர் கிடைக்கிறது, மறுக்கவில்லை; ஆனால், நமது கழகம் இத்துணை வேகமாகவும் சிறப்புடனும் வளருவதற்கு உள்ள மிக முக்கியமான காரணம், அச்சமும் அதன் விளைவான அருவருப்பும், பொச்சரிப்பும் அதன் காரணமாகக் கிடைக்கும் நச்சு நினைப்பும் கொண்டோர், நம்மீது வீசிடும் சுடுசொற்களே என்பதை நான் உணருகிறேன்; தம்பி! நீயும் அறிவாய்! கழகம் வளர வளர, கடுமொழி வளரும்; ஆனால் இறுதியில், கடுமொழி பேசுவோர்தான் தமது நோக்கையும் போக்கினையும் மாற்றிக்கொள்ளப்போகிறார்கள்; கழகத்துக்கு இம்மியும் கேடு பாடுவந்து சேராது.

இனியது கேட்கின்
கனிமொழித் தம்பி!
இனிது இனிது
அன்பர்கள் அருங்குழாம்
அதனினும் இனிது
ஆர்த்தெழும் மாற்றார்
திருந்தி நம்முடன்
சேர்ந்திட விழைதல்!

எனவே, என்றேனும், வென்று வருகிறோம் என்பதை அறிவதனாலே வெகுண்டெழுந்து நமது கழகத்தின்மீது ஒரு சிலர் வெறுப்பினைக் கக்கிடக் கேட்டால், தம்பி, குறித்துவைத்துக்கொள், நம்மீது அவர்கள் வீசிடும் ஒவ்வொரு சுடு சொல்லும் பத்து புதிய ஆதரவாளர்களை நம்மிடம் அழைத்து வருகின்றது, என்ற பேருண்மையை.

இன்றையப் பகைவர், நாளைய நண்பர், என்றார் ஒருவர்.

## மகிழ்கிறோம்

**இலங்கை வாழ் தமிழர்கள் ஆகஸ்ட் அறப்போர் நடத்த வேண்டிய அவசியமின்றி, ஒரு சமரச ஏற்பாடு உருவாவதாக அறிந்து அக மகிழ்கிறோம்.**

என் தேர்தலின்போது, "எனக்குத்தான் ஓட்டுப் போட்டாக வேண்டும்" என்று நான் வலியுறுத்திக் கேட்கும் அளவுக்கு உறவும் உரிமையும் உள்ள ஒரு இல்லத்திலே, ஒரு இள மாது, அண்ணாவுக்கு இல்லாமலா எமது ஓட்டு? என்று கூறி, என்னைக் களிப்புக் கடலில் ஆழ்த்திய பிறகு காங்கிரசுக்கு 'ஓட்' அளித்ததாக அறிந்து, ஒரு பொதுக் கூட்டத்தில், இப்போது இங்கு எழுதியது போலவே இடமும் பெயரும் குறிப்பிடாமல் பேசினேன்; அது புரிந்ததால், எனக்கு ஓட்டளிக்காததற்குக் காரணத்தை விளக்கியும், தான் கொண்ட போக்கு குறித்து வருந்தம் தெரிவித்தும் அந்த வனிதை எழுதிய கடிதத்தின் கடைசி எழுத்து, எனக்கு நினைவிற்கு வருகிறது.

இப்படிக்கு
எதிர்கால
தி. மு. க. உறுப்பினர்.

என்பதுதான், அந்த வாசகம்!

**இன்றையப் பகைவர் நாளைய நண்பர்** —ஆகிறார்களோ இல்லையோ, நாட்டு விடுதலை எனும் மிகப் பெரிய செயலுக்கு நாம் நம்மை ஒப்படைத்துவிட்டோம் — நாம் இந்தச் சீரிய நோக்கத்துடன் தான் பணியாற்றவேண்டும்.

உன் ஆற்றல், இதிலே எத்துணை வெற்றிபெற்றுத் தருகிறாய், என்பதைப் பொறுத்துத் தான் மதிப்பிடப்படும்.

பாட்டுக்கு பாட்டெடுப்பேன்
உன் பாட்டனுரைத்
தோற்கடிப்பேன்!

என்ற 'இலாவணி' முறையிலே அரசியல் நடத்துவது, எளிது; துவக்கத்திலே சுவை கூடத் தரும். ஆனால் அந்தச் சுவை, தம்பி, நானும் துளசி விளையாடும் பருவத்திலே மெத்தக் கண்டது தான். புளியம் பழத்தைச் சுவைக்கும்போது, புளிப்புடன் ஓர் இனிப்பும் கிடைக்கும்! ஆனால் இரண்டொரு பழம் உண்ட பிறகோ, எதைச் சாப்பிட்டாலும், நாக்கிலே எரிச்சல் ஏற்படும்!

தம்பி! இலாவணி முறை அரசியலும், இதுபோலத்தான்; எளிது, துவக்கத்தில் சுவையும் தருவது, பிறகோ, உள்ளத்தில் அமைதியைக் குலைக்கும், இலட்சியத்தைச் சிதைக்கும். நமக்கு வேண்டாம், அந்த முறை! அது அவர்களின் 'ஏகபோக உரிமை' யாகவே இருக்கட்டும்; அனுமதிப்போம்.

அண்ணன்,

அண்ணாதுரை

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிடநாடு" அச்சகத்தில்
சி. என். அண்ணாதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.